Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம்
★
தமிழன் பிரஸ், ஈரோடு.

# குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம்
★
நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 27-3-1948 சனிக்கிழமை மலர் 29.

## ஆத்திரம் வேண்டாம்!

அரசியலார் ஒருக்கால் வம்புக்கு வருவதானால் உங்களில் எத்தனைபேர் அதற்குத் தயாராயிருக்கிறீர்கள்? அதற்காகப் பலாத்காரத்தில் இறங்கக்கூடாது. எல்லா மக்களும் ஆணும் பெண்ணுமாகக் கட்டாயம் கருப்புச்சட்டை அணியவேண்டும்! இல்லங்கள் தோறும் கழகக்கொடியேற்ற வேண்டும்! உங்களை எவரும் ஒன்றும் செய்ய முடியாது! அப்படியும் தொல்லை கொடுத்தால் அதற்காவன செய்வதில் இயக்கமும் தலைவர்களும் கட்டாயம் பொறுப்பேற்றே தீருவார்கள். நீங்கள் அப்போதுங்கூட ஆத்திரப்படக்கூடாது.

—பெரியார்.

## என்னழிவு இயக்க அழிவல்ல! பிராமணீய அழிவே!

நான் இருக்கும் வரை நமது இயக்க வண்டி நிதானமாக ஓடி எதிரிகளுக்கும்பாது காப்பு அளித்து வருகிறது. என்னையும் காந்தியார் போன்று சுட்டு விட்டால் நமதியக்க வண்டி வேகமாகச் சென்று சூத்திரர் பட்டமும் பிராமணீயமும் விரைவில் ஒழியுமே தவிர என்னோடு திராவிடர் இயக்கக் கொள்கை அழிந்துவிடும் என்று எவராகிலும் கருதினால் அதைவிடப் பயித்தியக்காரத்தனம் வேறிருக்க முடியாது.

—பெரியார்.

## 1948 APRIL. 1948

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

பெண்கள் பகுதி:

# மாதர்களே! மடமையை மாய்ப்போம்.

"தோழியர் லட்சுமி"

★

(சகோதரர்களே! மாதர் பகுதிஎன்று படிக்காமல் இருந்து விடாதீர்கள். அவசியம் படித்துப் பெண்களின் நன் முயற்சிக்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்ய முன்வாருங்கள்!)

தோழியர்களே! நாம் ஆரியத்தின் சூழ்ச்சிக்கும், ஆண்களின் அவமதிப்பிற்கும் ஆளாகி, மதியீனத்தால் அறியாமை என்னும் குட்டையில் மூழ்கி விட்டோம்! அக்குட்டையிலிருந்து நாம் எவ்விதத்திலேனும் கரைசேர வேண்டும்—சேரத்தான் போகிறோம்! நம்மைக் கரைசேர்க்க—உதவியளிக்க திராவிட நாட்டு மக்களின் நலனுக்காகத் தம் வாழ்வைத் தியாகம் செய்த பெரியார் துடித்துக் கொண்டிருக்கிறார். கவலையின்றி நாம் அவர் காட்டும் அறிவுப்பாதையில் செல்வோமாக!

விஞ்ஞான வளர்ச்சியிலும், மற்ற எல்லாத் துறைகளிலும் மற்ற நாடுகள் வெகு வேகமாக முன்னேறும் இக்காலத்தில், தாழ்ந்த நிலையிலுள்ள திராவிட நாட்டு மக்கள் மட்டும் மூடக் கொள்கைகளையும் அர்த்தமற்ற பல சடங்குகளையும் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு, பகவத் பாராணம் செய்து கொண்டிருக்கிறார்கள்! வேதமும், மதமும் திராவிடரை அடிமைப் படுத்த ஒரு சாராரால் ஏவப் பட்ட ஆயுதங்கள் என்பதை உணர்ந்தும் உறங்கிக்கிடக்கும் நம்மை என்னவென்று கூறுவது?

மூடக் கொள்கைகளுக்கும், பிராமணீயத்திற்கும் பால் வார்த்து வளர்த்தவர்கள் நம் நாட்டுத் திராவிடப் பாவையர்கள்தான் என்பதை நாம் மறுக்க முடியாது. அதன் பயனாக ஆண்களுக்கோர் நீதி! பெண்களுக்கோர் நீதி! கணவன் மனைவியை அடித்து, அவமதித்து அதிகாரம் செய்யப் பிறந்தவன் என்றும், மனைவியானவள் 'கல்லானாலும் கணவன்—புல் ஆனாலும் புருடன், என்று பயந்து கிடக்கும் அளவுக்குப் பெண்மணிகளின் மனதில் பேதைமையைப் புகுத்தி விட்டனர்.

திராவிட நாட்டுப் பெண்களுக்கு இத்தகைய சீர்கேடான நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் போதிய கல்வி வசதி இல்லாமையே. நம் நாட்டுப் பெண்கள் மடமைகளுக்குத் தலை வணங்கிப்போன பழங்காலம் பறந்து விட்டது. தங்களுக் கிழைத்த தீங்கை எண்ணிப் பார்க்கும் அளவுக்கு அறிவு வளர்ச்சி அடைந்து விட்டனர் திராவிடப் பெண்கள்.

பெண்ணடிமை என்று ஒழிகிறதோ, அன்றே நம் திராவிடத்தின் வெற்றி நாளாகும். பெண்களுக்கு—அதாவது படிக்க வசதியற்ற பெண்களுக்கு, கட்டாயக் கல்வி புகட்டி நம்நாட்டின் முன்னேற்றத்திற்காக, ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமானமாகத்தொண்டாற்றுவது மிக மிக அவசியம்.

என்னதான் அறிவு வளர்ந்தாலும், கற்றுத் தேறினாலும் அடுப்படி தானே பெண்களுக்குக் காரியாலயம் என்று, எத்தனையோ பேர்கள் மேற் கூறிய என் அவாவைக் கண்டு எள்ளி நகையாடலாம்.

ஏன் அப்படி என்றுதான் நான் கேட்கிறேன். பொறுமை—வீரம்—நாட்டுப் பற்று இவைகளை எல்லாம் சிறுவர், சிறுமியர்களுக்குப் பிரம்பாட்சியின் கீழ் போதிப்பதைவிட, பொறுமையாகத் தாய்ப்பீடத்தை அலங்கரிக்கும் பெண்களிடம் ஆசிரியர் தொழிலை ஒப்படைத்தால் திறம்பட நடத்த மாட்டார்களா?

இன் குரல் கொடுத்து கனிந்த மொழிகூறி கவலையைப் போக்கி, கட்டிலோடுகிடக்கும் நோயாளிகளைத் தம் சலியா உழைப்பால் புத்துயிர் பெறச்செய்யும் வைத்தியத் தொழிலை நடத்த ஆண்களைவிடப் பெண்களே சிறந்தவர்கள் என்று நான் கூறுகிறேன்.

பத்திரிகை நடத்தல்-தையல்-ஓவியம் எல்லாக் கலைகளையும் பெண்களால் நடத்த முடியும் என்பது என் கருத்து.

நாட்டுக்குப் பெண்களால் எற்படும் நன்மையை வீணாக்கி, ஆண்-பெண் என்ற வித்தியாசம் பாராட்டி, பெண்களை அடிமைப் படுத்தும் கெட்ட எண்ணத்தை இனியாவது நம்நாட்டை விட்டு விரட்டுவோமாக!

மேல் நாட்டில் ஆண்களோடு பெண்களும் சேர்ந்து எல்லாத் துறைகளிலும் தொண்டாற்றுவதால்தான், மேலை நாட்டவர் மற்ற நாட்டவர்களைக் காட்டிலும் முன்னேற்றமடைந்து விளங்குகிறார்கள். அவர்களை விட மேலான வகையில் வாழுவதற்கு எல்லாச்சாதனங்களிலிருந்தும், மடமையில் அழுந்தித் துன்ப வாழ்க்கையையே நம் சொந்த வாழ்க்கை ஆக்கிக்கொண்டோம்.

பெரும்பாலும் கல்வி வசதியற்ற நம் கிராமத் தோழியர்களின் கண் மூடித்தனத்தை அகற்ற, படித்த பல தோழியர்கள் முற்பட வேண்டும். தோழியர் மங்கையர்க்கரசியார் எழுதியதுபோல், நம்நாட்டிற்குப் பெண் கல்வியும் முதியோர் கல்வியும் மிக மிக அவசியம். ஒவ்வொரு ஊரிலும் திராவிட மாதர் சங்கம்-நூல் நிலையம் ஏற்படுத்துவதோடல்லாமல் வாரத்திற் கொருமுறையோ—இரண்டு முறையோ அவரவர் ஊர்களுக்கருகாமையிலுள்ள கிராமங்களுக்குச் சென்று, மூடநம்பிக்கைகளிலும், அர்த்தமற்ற பல சடங்குகளிலும் அவர்களுக்குள்ள நம்பிக்கை ஆதாரமற்றவை என்பதைச் சிறந்த முறையில்-தெளிந்த கருத்துக்களோடு எடுத்துக் கூறல் வேண்டும். அவர்களுடைய மனதில் உண்மைக்கு இடமளித்து மடமையைமாய்த்துக் கட்டுவதற்குரிய வகையில் நம் சிந்தனையை ஓட்டவேண்டும்.

நெடுநாட்களாக அவர்கள் மனதில் ஊறிப்போன பழம் போக்கை, வெகு சீக்கிரத்தில் அகற்றிவிட முடியாது. முயற்சி எடுத்தால் கட்டாயம் முன்னேற்ற மடையலாம். அவர்கள் கேட்கும் சிக்கலான கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் அளித்து வெற்றி பெறல் வேண்டும். எளிய நடையில் பலஅரிய கருத்துக்களையும்—நல்லுரைகளையும் தாங்கிய சிறு புத்தகங்கள் வெளியிட்டுக் கிராமத்தவர்களுக்கு இலவசமாக வழங்கவேண்டும்.

திராவிடத் தோழியர்களே!

இத்தகைய நல்லறிவைக் கூறும் நம் பெரியாரைப் பிற்போக்காளர்—மதவிரோதி—நாத்தீகர் என்று நம்பத் தகாதவைகளைக் கூறி நம்மை ஏய்க்கப் பார்க்கின்றனர். நம் அறிவைக் கொண்டு சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

அறிவால் மனிதன் உயர்ந்தவனே தவிர,மதத்தால்மனிதன் உயர்ந்தவனல்லஎன்று கூறும் நாம் மதவிரோதியானால், தாமாக உற்பத்தி செய்த மதத்தால் மக்களை அடிமைப் படுத்த எண்ணும்மற்றொருசாராரைமனித விரோதி என்று கூறுவதுதான் பொருந்தும்.

மகானைக் கொன்ற மதத்தை மாய்ப்போம், என்று கூறும் நாம் நன்றியற்றவர்களானால்,மகானைக் கொன்ற மதத்தை மறைமுகமாக வளர்க்கும் மற்றொருசாராரைஎன்னவென்றழைப்பது? கடவுளின் பெயரைக்கூறிப் பண மூட்டையைப் பலப்படுத்தும் அவர்கள் நாத்தீகர்களா? அல்லது உருவமற்ற கடவுளை உள்ளத்தினுள் துதியுங்கள் என்று கூறும் நாம் நாத்தீகர்களா? இதை எல்லாம் எடுத்துக்கூறி மக்களின் அறிவுப் பாதையை அகலப் படுத்தும் நாம் பிற்போக்காளர்களா? அல்லது அவனன்றி ஓரணுவும் அசை

# பள்ளியில் சமயத்தைப்பரப்ப, இந்துமதத்திற்கு எந்த ஏடு?

"கைவல்யம்"

★

பள்ளிகளில் இந்துப்பையன்களுக்கு இந்து சமயத்தைப் போதிப்பதானால், எல்லா இந்துப் பையன்களுக்கும் ஒரு பொதுவான சமய ஏடு வேண்டுமே! அது எந்த ஏடு? என்பதை முன் வியாசத்தில் கேட்டோம். அதைப்பற்றியே இந்த வியாசத்திலும் ஆலோசிப்போம்.

மனிதனுடைய புத்தி விசாலப்படாதபடி கிரியைகளாலும், சாஸ்திரங்களாலும் கையையும், காலையும் கட்டிப் போட்டு முன் நடத்திய வழியே இப்பொழுதும் நடத்த நினைப்பது வஞ்சனையும், துரோகமுமாகும். அவ்வழி நடத்தவேண்டு'மென்று நினைப்பவர்கள் வஞ்சனையுடையவர்கள், அல்லது ஆலோசனை இல்லாதவர்கள். பிராமண மேதாவிகள் பிரசங்கம் செய்கையில், இந்து தருமத்தை நிலை நிறுத்தவேண்டுமென்கிறார்கள். இந்து தருமமென்றால் என்ன? அதை விவரித்துச் சொல்லுங்கள் என்று கேளுங்கள். சுயமரியாதைக்காரன் கேட்டால் நாத்தீகன் என்பார்கள். ஆத்தீகர்களிருக்கிறார்கள், பெரிய பண்டிதர்களிருக்கிறார்கள். அவர்களாவது கேட்கட்டும்! எல்லோரும் தெரிந்து கொள்ளட்டும்!

சனாதன தருமமென்கிறார், வைதீக சாஸ்திரி. வருணாஸ்ரம தருமமென்கிறார் புரோகித சாஸ்திரி. இந்துக் கலாச்சாரமென்கிறார் ஆங்கிலம் படித்தசாஸ்திரி. இந்து தருமமென்கிறார்கள் ஆங்கில அதிகாரம் படைத்த பிராமணர்கள். இந்த நாலும் ஒன்றுதான். இந்துக் கலாச்சாரம், இந்துத் தருமம் என்கிற பெரிய வார்த்தைகளினால் மூடப்படும் மகத்தானதை நாமெல்லாம் எப்பொழுது தான் தெரிந்துகொள்ளுவது? சங்கராச்சாரியார் திரைமறைவிலிருந்து, மத்தியில் ஒரு பிராமணனால் நமக்குப் பேச்சும்,தெரிசனமும் கொடுத்து வந்த காலத்தில், இந்து தருமக் கலைகளைத் தெரியக்கூடாதென்றார்கள். இப்பொழுதோ சங்கராச்சாரி அன்னிய மதத்தாதி பெண்களின் உபசரணையால் விமானத்தின் மூலம் சிஷ்யகோடிகளுக்குத் தெரிசனம் கொடுக்கையில், இந்துதருமத்தை விவரமாகச் சொல்லுவதற்குத் தடை என்ன? எப்படியானாலும் தெய்வத்தின் பெயர் சொல்லி மனிதனை மனிதன் கீழ்படுத்தி அவமதித்து அடிமைப்படுத்தும் எந்த இந்துசமய சாஸ்திரமும், இந்து தருமக்களஞ்சியமும் பள்ளியில் பாடமாக வைக்கக்கூடாது. அங்கொரு வாக்கியம், இங்கொரு பாட்டு இவற்றால் பொருத்துவதும் சரியல்ல. கல்வி மந்திரியின் அதிகாரத்தால் எதையும் பாடமாகவைக்கலாம். பண்டைய மத சம்பிரதாயங்களுக்கு விரோதம் சொல்லக்கூடாதென்கிற கல்வியில், குறுகிய களத்தின் பழக்கத்தைப் பார்க்க முடியுமேயல்லாமல் விசாலக் காட்சியைப் பார்க்க முடியாது.

வாசகர்களே! வாலிபர்களே! முதன்மையானது கல்வி. சமயக்கல்வியில் சீரழிந்தவர்கள் நாம். ஆனதால் கல்வியில் நம் கருத்துச் செல்லவேண்டும். மனிதர்களுடன் நாம் சமமாகவாழ வேண்டுமானால் கல்வி முக்கியம். கல்வியே அறிவு. அந்தஅறிவு எல்லாத் தேசத்திலும், எல்லோருக்கும் பொது. நமது நாட்டில் மட்டும் அறிவு பொதுவல்லவென்று தடுக்கப்பட்டிருக்கிறது. இதைவிட அநீதியுண்டா? இதைச் சொன்னால் வகுப்புவாதமென்கிறார்கள். கடவுளுக்கும் ஜீவனுக்குமுள்ள தொடர்பு, சமயம். அகண்டாரூபமான பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவிற்குமுள்ள சம்பந்தம் சமயம்; பஞ்சபூத உற்பத்தி அதன் சேர்க்கை. உலகம் அதன் காரணகாரியங்கள். ஜீவ அய்க்கியம், பந்தம், ஒற்றுமை, சிநேகம் அன்பு, தயை முதலியவைகளை விவரித்து விளக்கமாகச் சொல்லுவது சமயநூல். இது உபநிஷத்துகளிலும், பிராமணம் என்கிற சுருதியிலுமுள்ளவை. இதைப் படிக்கச் சூத்திரனுக்கு அதிகாரமுமில்லை, படிக்கவும் கூடாது, சொல்லிக் கொடுக்கவும் கூடாது, சொல்லிக் கொடுக்கவுமாட்டார்கள். இன்றும் அப்படியே. யூனிவர் சிட்டியை உண்டு பண்ணிய அண்ணாமலையும், பல லெட்சத்தை கல்விக்குக் கொடுக்கும் அழகப்பரும், இந்தியாவின் வரவு செலவைக் கணிக்கும் சண்முகமும், முதல் மந்திரி ஓமந்தூராரும், கல்விக்கே மந்திரியாயிருக்கும் அவினாசியாரும், கம்பராமாயணக் காட்சி ஆளர் டி. கே. சியும், இராமாயண ஆராய்ச்சி சேதுவும், அப்படியே முத்துரங்க முதற்கொண்டு பெரிய தேசீய வாதிகளும் சூத்திரர்கள் சூத்திரர்கள்தான். இதில் எல்லோரும் சமம்தான். இதை ஏற்படுத்தினவரும், சொன்னவரும் கடவுள் என்கிறார்கள். இதைச் சொன்ன கடவுள் எப்பேர்ப்பட்ட கடவுள் அய்யா என்று ஈ. வெ. ரா. பெரியார் கேட்டால், நாஸ்தீகன் என்கிறார்கள். மனிதன் சொன்னது தான் என்றால் வகுப்புத்துவேஷி என்கிறார்கள். ஆஸ்தீகப் பிரமுகர்கள், பண்டித மேதாவிகளாவது கேட்டு, அந்தக் கடவுளைத் தெரிந்து வைத்துக்கொள்ளக் கூடாதோ? இது ஒரு முக்கிய விஷயமல்லவா? "கடவுளைத் தெரிந்து கொள்ளவே மனிதன் பிறந்தான்." இது தானே பண்டிதன் சாஸ்திரிகள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

புராணக்கதைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு ,கற்பனைகளையும் கூட்டிச் சிவபெருமானுக்குப் பெருமையாக, மூவர்கள்பாடிய கடவுள் துதியே தேவாரம். பிராமணர்கள் பண்டாரப் பாட்டென்றும், சூத்திரப் பாஷை என்றும் சொல்லுகிறார்கள். சொல்லுவது மட்டுமல்ல, நினைப்பதும் நடத்துவதும் அப்படியே. ஆகம சித்தாந்த சாஸ்திரங்கள் அபர வித்தை என்று ஸ்மார்த்தர்கள் தள்ளி விட்டார்கள். தீட்சையுடைய சைவன் தீட்சையில்லாத எந்தப் பிராமணன் வீட்டிலும் உண்ணப்படாது. ஆகமக் கிரியைகளுக்கு ஸ்மார்த்தப் பார்ப்பான் தள்ளப்பட்டிருக்கிறான் என்றாலும், இப்பொழுது சைவ மடங்களிலெல்லாம் ஸ்மார்த்தப் பார்ப்பானே கிரியைகளுக்கும், தெட்சணைகளுக்கு முன்னாலிருப்பவன். சைவர்கள், பிராமணர்களைப்போல மற்ற சாதிக்காரர்களுக்குத் தாங்களும் மேலானவர்கள் என்பதைக் காட்டிக்கொள்ள, பிராமணர்களால் சற்சூத்திரர்கள் என்று ஸ்தானம் பெற்றவர்கள். சற்சூத்திரன் என்றால் நல்ல தாசிமகன், நல்ல மடையன், நல்ல ஒழுக்கம் கெட்டவன் என்று மறைமலை அடிகள்எழுதினதைச்சைவர்கள் இன்னமும்தெரிந்து கொள்ளவில்லை. அந்தச் சைவர்கள் தேவாரத்தைத்தமிழ்வேதமென்கிறார்கள். அந்தத் தேவாரத்தைச்சைவப்பிள்ளைகள் தவிர, மற்ற திராவிடத் தமிழப்பிள்ளைகள் படிக்கக் கூடாதென்று தேவாரப் பாடசாலையில் சேர்த்துக்

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

யாது என்று கூறி மக்களின் அறிவைக் குறுக்கி அழிக்கும் அவர்கள் பிற்போக்காளர்களா?

மேலை நாட்டவர்களுக்கு அணுகுண்டிலிருந்து—ஆகாய விமானம் வரைக்கும் கடவுள்தான் கொடுத்தார்! அந்நாட்டு மக்களின் முயற்சியால், விஞ்ஞான ஆராய்ச்சியால் உண்டாக்கப்பட்டவைகளல்ல, என்பது உங்களுக்குத் தெரியாதல்ல. இதிலிருந்து திராவிட சகோதரிகளே! உண்மையை உணர்ந்து உங்கள் பகுத்தறிவுக்குப் பிடித்ததை ஏற்றுக் கொள்ளுங்கள்.

வாழ்க திராவிடம்! ஒழிக பெண்ணடிமை!

# முதன் மந்திரியாருக்கு!

"ஈ. மா. பரசுராமன்"

☆

கனம் முதல்மந்திரியாரே! வணக்கம்.

தாங்கள் கிரிமினல் திருத்த 16 வது செக்ஷனின்கீழ் திராவிடக்கழகம்சட்ட விரோதமானது என்ற அறிக்கையை விட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன். ஆனால் அதே சமயத்தில் தங்கள் ஆட்சியில் நாட்டில் உடனடியாகச் செய்யவேண்டிய காரியம் எவ்வளவோ உள்ளது. அதைவிட்டு அர்த்தமற்ற அயோக்கியர்களின் வார்த்தையைக் கேட்டு கிரிமினல் சட்டத்தைத் தேடியதற்கு மிக மிக வருந்துகிறேன். தாங்கள் திராவிடக் கழகத்தைச் சட்ட விரோதமானது என்று எந்த விதத்திலாவது நிரூபிக்க முடியுமா? அல்லது தங்களுக்குக் கூறியவர்களாவது நிரூபிப்பார்களா?

ஒரு நாட்டின் மந்திரி என்றால், அந்த நாட்டிலுள்ள ஒருசில கும்பலின் பத்தாம்பசலி வார்த்தைகளைக் கேட்டு நடப்பவர் என்று அர்த்தமல்ல. அந்நாட்டிலுள்ள அனைவரின் நலன்கருதி நடக்கக் கூடியவர். அம் முறையில் பார்த்தால் தாங்கள் அப்படி நடந்திருப்பதாகத்தெரியவில்லை. "சொந்தப் புத்தியாவது இருக்கவேண்டும்; அல்லது சொல்புத்தியாவது இருக்கவேண்டும்" என்று சொல்லுவார்கள். அம் முறையில் பார்த்தால் தங்களுக்குச் சொந்த புத்திஇல்லை என்றுதான் தெரிகிறது. சொல்புத்தியாவது வேண்டுமென்றால் அறிவில்லாதவனுக்கும், கல்வியில்லாதவனுக்கும், உலக அனுபவம் இல்லாதவனுக்கும், பொருந்துமே தவிர ஒரு மந்திரியாய் இருப்பவருக்கு, அதுவும் முதன் மந்திரியாய் இருப்பவராகிய தங்களுக்குச் சிறிதும் பொருந்தாது.

"மேலும் கட்டிக்கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த புத்தியும் எவ்வளவு நாளைக்கு வரும்" என்று பெரியோர்கள் கூறியது போல, இன்றுதங்களுக்குத் திராவிடக் கழகம் வகுப்புத் துவேஷத்தை வளர்க்கிறது என்று கூறியவர்களின் யோசனையும், ஒத்துழைப்பும் எவ்வளவு நாளைக்கு இருக்குமென்று நினைக்கிறீர்கள்.

"அரசன் அன்றுகொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்" என்பதை நீங்கள் தெரிந்திருப்பீர்கள்! ஆனால் "பார்ப்பனீயம் நினைத்தால் கொல்லும்" என்பதை மட்டும் நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். தாங்கள் சொந்தப் புத்தியைக் கொண்டு சிந்தித்துப் பாருங்கள், திராவிடக் கழகம் வகுப்புத் துவேஷத்தை வளர்க்கக் கூடிய ஸ்தாபனமா என்று?

வெள்ளையன் ஆட்சியில் இவ்விதமான அக்கிரமங்கள் கிடையாதே. உங்கள் கட்சி (காங்கிரஸ்)யின் கொள்கை வெள்ளையனுக்குப் பிடிக்கவில்லை. மேலும் அவனை இந்த நாட்டிலிருந்து விரட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தீர்கள். பாம்கள் தயாரித்தீர்கள், தண்டவாளங்களைப் பெயர்த்தீர்கள், தந்திக்கம்பிகளை அறுத்தீர்கள், ஆகவே அவன் (வெள்ளையன்) உங்களை தன் ஆட்சியில் கைது செய்தான். உண்மை; ஒப்புக் கொள்ளக்கூடிய செய்தி.

ஆனால் திராவிடக் கழகமானது "ஏ! பார்ப்பனீயமே, மத்திய ஆசியாவிலிருந்து ஆடுமாடுகளுக்குப் புல் தேடிக் கொண்டுவந்து குடியேறிய ஏ!லம் பாடிக் கூட்டமே! இந்த நாட்டிற்கு உரிமை பூண்ட, இந்தநாட்டை ஆண்ட மக்களை நீ என் உன் வைப்பாட்டி மக்கள் என்று கூறுகிறாய்? நீ என் உயர்ந்தவன் என்று கூறிக்கொண்டு அறிவில்லாத மக்களை ஏய்த்துப் பிழைக்கிறாய்? நீ என் எங்கள் தோழர்களைப் போல் வயல்களில் உழக்கூடாது? என் அவர்களைப் போல் மண்வெட்டியை எடுத்து வெட்டக் கூடாது? நீ மட்டும் என் உயர்ந்த உத்தியோகத்தில் இருந்து கொண்டு உழைக்காமல், அலுங்காமல், குலுங்காமல், உண்டுகொழுத்து உத்திரம்போல் பெருக்கிறாய்? நெற்றி வேர்வை நிலத்தில் விழப்பாடுபடும் எங்கள் இனம்என் அரைவயிற்றுக் கஞ்சிக்கும் ஆலாய்ப் பறக்கவேண்டும்? நீயும் எங்களைப் போல் அதாவது நான் உயர்ந்தவன், முகத்திலுதித்தவன் என்பதை விட்டுவிட்டு, அதற்கு அடையாளமாக இருக்கக்கூடிய பூணூலை (Cross belt) அறுத்தெறிந்து விட்டு, எங்களுடன் சேர்ந்து சமத்துவமாக இந்தநாட்டிலேயே வாழலாம் என்று கூறுகிறதே ஒழிய, "வெள்ளையனே வெளியே போ!" என்ற மாதிரி "ஆரியனே மத்ய ஆசியாவிற்குப்போ!" என்ற கூற வில்லை. மேலும் எங்கள் நாட்டை வடநாட்டார் சுரண்டக்கூடாது, அன்னியன் அடக்கி ஆளக்கூடாது என்று வற்புறுத்துகிறதே தவிரவர்ணாச்சிரம தர்மத்தை வளர்க்கவில்லை. இக்கொள்கையை உடைய ஒரு இயக்கம் வகுப்புத் துவேஷமா! நன்றாகச் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் கனம் மந்திரியார் அவர்களை. இதற்காக எங்கள் கழகத்தார்களை கைது செய்வது நியாயமா? என்று கேட்கிறேன்.

சாதிக்கொருநீதிவகுத்துப்பேதத்தை வளர்ப்பதும், இதனை வலியுறுத்தும் "மனுதர்ம" சாத்திரத்தைக் கொண்டதுமாகிய இந்து மதம் ஒரு கொடிய நச்சரவமாகும். ஆனால் எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம் என்னும் சமதர்ம மனப்பான்மையைக் கொண்டது திராவிடனுக்கு, தமிழனுக்குத் தனிப்பெருமையை அளிக்கக் கூடிய தமிழ் மறையின் நீதியாகும். இந்துமத வர்ணாச்சிரமத்தைக் கொண்டதும், பகவத் கீதையில் கூறியபடி நாலு சாதியை 48000 ஜாதிகளாகப் பெருக்கிச் சூழ்ச்சி முறையில் வளர்ச்சியடைந்து வருவது பார்ப்பனீயம். ஆனால் ஒன்றே குலம், ஒருவனே தேவன் (அதுவும் உருவம்இல்லாதது) என்ற கொள்கையை உடையது திராவிடர் கழகம். ஆபாசக் கருத்துக்களைக் கொண்ட வேத, புராணங்களை மக்களுக்குப் போதித்து மக்களை மாக்களாக்கும் கொள்கையைக் கொண்டது பார்ப்பனீயம். ஆனால் அறிஞர்களின் அறிவுரைகளை, அநுபவ உண்மைகளை மக்களிடையே பரப்பி, அவர்களை மக்களாக, சிந்தனைச் சிற்பிகளாக என்? எப்படி? எதற்கு? என்ற கேள்விகளைக் கேட்கக்கூடியவர்களாக்குவது திராவிடக் கழகத்தின் கொள்கைகளில் ஒன்றாகும்.

இந்து மதம் பலம் பொருந்திய ஒரு ஸ்தாபனம். அது இந்தியா பூராவும் பரவியிருக்கக்கூடியது. அதை அசைக்க யாராலும் முடியாது. அதனை வைத்துக்கொண்டே (இந்துமதத்தை) இன்னும் எங்களை அடக்கியாளுவோம் என்கிறது பார்ப்பனீயம். ஆனால் திராவிடக் கழகம் கூறுகிறது இந்து மதம் இந்த நாட்டில் ஏற்படுவதற்கு முன்பே இந்த நாட்டில் சப்பாத்தி என்னும் முட்செடி நிறைந்த பயங்கரப் புதர்கள் நிறைந்திருந்தன. ஆனால் வெள்ளையனால் இத்தாலியிலிருந்து கொண்டு வரப்பட்ட "இத்தாலிப் பூச்சி" என்னும் மிகச்சிறிய ஆறு பூச்சிகளானது ஆயிரக் கணக்கில் பெருகி, சப்பாத்தி என்னும் கொடிய செடியை, மூவேந்தர்களாலும் அழிக்க முடியாத அந்தச் செடியை அழித்து விட்டது. அதுஇத்தாலிப்பூச்சி. அதே

[தொடர்ச்சி 14ம் பக்கம்]

# சமவுரிமையை மழுப்பிவரும் சழக்கர்கள்,

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி

# ★ அணுச்சக்தி! ★

[பேனாச் சோமு]

★

இரண்டாம் உலகப் பெரும் போரை நிறுத்தியது இந்த அணுச்சக்திதான்! இன்னொரு போர் ஏற்படுமானால் உலகத்தையே அழித்துவிடக் கூடியதும் இந்த அணுச் சக்திதான்! இதனால் நன்மையும் ஏற்படும், தீமையும் விளையும்! இந்த இரண்டிலே நன்மையை உண்டாக்க வேண்டியது இதைக் கண்டுணர்ந்தவர்களின் கடமை!

ஆதிக்க வெறிகொண்டிருந்த அச்சு நாடுகளான ஜர்மனியும், இத்தாலியும், போரிலே படுதோல்வியடைந்து, நேச நாடுகளிடம் சரணாகதி யடைந்த போது, ஜப்பானின் 'சமர்புரியும் திறன்' உச்ச நிலையிலே இருந்தது! ஜர்மன் சரிந்தாலென்ன! இத்தாலி தோற்றாலென்ன! நான் பணியமாட்டேன்! நேசநாடுகளை எதிர்த்துப் போராடுவேன்! எனக் கொக்கரித்த ஜப்பான் ஒரு சில நாள் போரிலேயே, நிபந்தனையற்ற சரணாகதி யடைந்ததற்கு, மூலகாரணம் இந்த அணுச்சக்தியினால் உண்டாக்கப்பட்ட அணுக்குண்டின் அழிக்கும் சக்திதான்! பல ஆண்டுகளாக உலகையே தாங்கொணாத கஷ்டத்துக்குள்ளாக்கி வந்த பெரும்போர், அணுக்குண்டின் வருகையால்நின்றது. போர் நின்று, மாநில மக்கள் சமாதானத்தோடு வாழக்கூடிய நேரம் இது! இப்போது உலகுக்கு தேவையானது, மகத்தான அழிவுக்கருவியான அணுக்குண்டல்ல! உலகுக்கு இப்போது தேவையானது, அணுச் சக்தி. அந்தச் சக்தியால் மக்களுக்கு என்னென்ன வகையில் நல்லது செய்யலாம் என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லும், விஞ்ஞான விற்பன்னர்கள் உலகுக்குத் தேவை! அந்த விஞ்ஞானிகளை உற்சாகப்படுத்தி, ஆதரவளிக்கக் கூடிய அரசாங்கம் தேவை!

"அணுச்சக்தியா? அது மகத்தான அழிவுக் கருவியாயிற்றே! ஆயிரக் கணக்கான மக்களை அநியாயமாகக் கொன்றதாயிற்றே! அதை நினைப்பதே பாபம்" என்று நம் நாட்டிலே நடமாடும் சில மந்தமதியினர் கூறுகின்றார்கள். அணுச்சக்தியை மட்டுமா கூடாதெனக் கூறுகின்றனர்? விஞ்ஞானமே கூடாதென்கின்றனர்! இயந்திர சாதனமே இருக்கக் கூடாதென இயம்புகின்றனர்! நாசத்தை விளைவிக்கிற எதுவும் நமக்குக் கூடாது தான்! அதற்காக, அந்தக் கருவியே தேவையில்லை எனக்கூறுவது தவறாகும்! அந்தக் கருவியைக் கொண்டே, நன்மை விளையும் காரியங்களை நாம் செய்து கொள்ளமுடியும்! இயந்திரத்தினால் நன்மையும் செய்யமுடியும், தீமையையும் உண்டாக்கமுடியும்! நன்மையை உண்டாக்குவதும், தீமையை விளைவிப்பதும், அதை வைத்திருப்பவர்களின் மனப் பண்பைப் பொறுத்தது! அழிவு வேலைக்கு ஒரு சிலர் விஞ்ஞானத்தை உபயோகிப்பதால், விஞ்ஞான சாதனமே கூடாதெனக் கூறுவது அறிவுடைமையாகாது.

நம் நாட்டிலே விஞ்ஞானமே கூடாதென்ற உணர்ச்சிதான் தவறாகப்பரப்பப்பட்டு வருகிறது. மற்ற நாடுகள் நாளுக்கு நாள் நாகரீகத்தில், அறிவில் ஆராய்ச்சியில் முன்னேறும் போது, நம் நாடுமட்டும் கற்காலத்துக்கு இழுத்துச் செல்லப் படுகிறது, ஒரு சில பிற்போக்கு மதவாதிகளினால்! மற்ற நாடுகள் அறிவின் ஏணியிலே மென்மேலும் ஏறிக்கொண்டு போகும் போது, நம்நாடு அந்த அந்த அறிவு ஏணியினின்று கீழே குதித்துவிட்டது மட்டு மல்ல, அறியாமை என்னும் அழிவுக்குழியைத்தானே தோண்டிக்கொண்டிருக்கிறது! அணுச்சக்தியை எப்படி மக்களுக்குப் பயன்படக் கூடியதாகச் செய்வது? அதன் சக்தியை எந்தெந்த விதத்தில் எது எதற்கு உபயோகிப்பது? அணுக்குண்டு வீசி, ஆப்பிரிக்கக் காடுகளை அழித்து, மக்கள் குடியேறக் கூடிய வளமுள்ள நாடாக்க முடியுமா? அப்படி நாடாக்கிவிட்டால் நம் அரசாட்சியை அங்கு நடத்தமுடியுமா? என்ற யோசனையும், அதற்கான திட்டங்களையும் மற்றநாட்டு 'ஆளுபவர்கள்' தீட்டுகிறார்கள்!

இதோ நம்மை ஆளுபவர்களுந்தான் திட்டம் தீட்டுகிறார்கள், சட்டசபையிலே தூங்கலாமா? அப்படித் தூங்கும் போது குறட்டைச் சத்தம் வரலாமா? என்பது பற்றி!

உண்மையிலேயே, நாட்டின் முன்னேற்றத்திலே நாட்டங்கொண்டயாரும், வெட்கித்தலை குனிய வேண்டும்; மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பேசக்கூட, நம்நாடு பண்படையாத நிலையிலே உள்ளதே என்று நினைக்கும் போது! ஆனால் அந்த நினைப்பு, மற்ற நாடுகளுடன் நம்நாட்டைஒத்துப் பார்த்து, அவைகள் மட்டும் அணு வேகத்தில் முன்னேறவும், நம் நாடு மட்டும் இன்னும்பழைய நிலையிலேயே இருப்பதற்கும் காரணம் என்ன எனக் கண்டறிந்து காரியமாற்றும் பழக்கம், பண்பு நமக்கு இல்லை! நாம் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிற தெல்லாம், 'ரகுபதி ராகவ ராஜா ராம்' என்பதைத் தாளம் தவறாமல் பாடவும், அந்தராகவன் விட்ட அக்கினி யாஸ்திரம், அமரிக்காவின் அணுகுண்டைவிட அதிக சக்திவாய்ந்தது என்றும், எல்லாவற்றையும் நம்மிடமிருந்துதான் கற்றுக் கொண்டார்கள் என்று வீண் பெருமை பேசிக் கொள்ளவுந் தான்! அந்த நாடுகளில், காட்டுமிராண்டிக் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட தார், ஓடன் முதலிய கடவுள்கள் ஒழிக்கப்பட்டு அறிவே கடவுள் என்ற கொள்கை பரவியிருக்கிறது.

நம்நாட்டிலேயோ, கற்காலத்திலே மக்களுக்குக் காரணம் காணும் திறன் (Reasoning Power) இல்லாத போது, எதற்கோ, எப்படியோ ஏற்படுத்தப்பட்ட சாதாரணக் கடவுள்களான 'காட்டேரியும், கருப்பண்ணனும், காளியும், மாரியும், முனியனும் கூட இன்னும் ஒழிக்கப்படவில்லை! ஒழிக்கப்படாதது மட்டுமல்ல! அதற்காக திருவிழாக்கள், நாள்தோறும் பல லட்ச ரூபாய் செலவில் தங்கு தடையின்றி நடத்தப்பட்டு வருகின்றது!

அங்கு சந்திர மண்டலத்துக்குப் போவது எப்படி? அதற்குஅணுச்சக்தி பயன்படுமா? என ஆராய்ச்சி செய்கிறார்கள்!

இங்கு நாம், சந்திரனுக்கு எத்தனை மனைவிமார்கள்? அவர்களில் சந்திரனுக்குப் பிடித்த ஆசை நாயகி யார்? என்பதிலும், குருபத்தினியான 'தாரை'யைக் கூடினானாமே சந்திரன், அது சரியா? தவறா? என்ற ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருக்கிறோம்.

அங்கு, வடதுருவத்தையும், தென் துருவத்தையும் மக்கள் வாழுவதற்கு ஏற்ற இடமாகச் செய்வது எப்படி? அதற்கு வழியுண்டா? என்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றனர்.

இங்கு நாம், இல்லாதமோட்சத்திலே, இருப்பதாகச் சொல்லப்படும் இன்பத்தைப்பற்றி எண்ணி, அங்கு செல்ல வழியுண்டா என்ற யோசனையிலே ஈடுபட்டிருக்கிறோம்.

அங்கு நினைத்த நேரத்தில், வேண்டிய இடத்தில் தேவையான அளவு, மழையைப் பெய்விக்கும் கருவியைக் கண்டுபிடித்து விட்டார்கள்!

இங்கு நாம், எந்தப்பத்தினி பெய்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

## சமதர்மம் பேசுதல் தக்கதா? ஒழுங்கா?

# வரதன் வாழ்வு.

"மு. ராஜமாணிக்கம்"

★

வாழ்க்கை ஒரு பாய்மரப் படகு. அது காலம் என்னும் கடலைக் கடக்கும்போது எதிர்பார்க்கும் இன்னல்கள் ஏராளம். முதலில் பழுதற்ற படகு தேவை. பாய்மரம் சரியாக இருக்க வேண்டும். படகில் ஓட்டையிருக்கக் கூடாது. தள்ளு துடுப்பும் சரியாக இருக்க வேண்டும். இவைகள் சரியாக இருந்தால் மட்டும் போதும், வெற்றியாகக் கடலில் கலத்தைச் செலுத்தி விடலாம் என்று எண்ணுவது முடியாது. மலை போன்ற அலைகளின் மத்தியிலோ, கடற் புயலிலோ, கடுமையான உஷ்ண நீரோட்டங்களிலோ அகப்பட்டுவிடுமாகில், தப்பிக் கரை சேர்வதோ தொடர்ந்து பிரயாணஞ் செய்வதோ முடியாத காரியந்தான். அதுபோலவேதான் ஒருவனுடைய வாழ்க்கையும் அவன் கடக்கும் காலமும். ஒருவன் அங்க அவயவங்கள் சரியாக அமையப்பெற்று விட்டதாலேயே காலத்தில் பூங்காவைக் காண முடியாது. வாழ்க்கையைச் சரியாக அமைத்துக் கொண்டாலுங் கூட ஏழ்மை என்ற புயலிலோ, வறுமை என்ற வெள்ளத்திலோ, சுரண்டுதலையே சுயரூபமாகக் கொண்டுள்ள கொள்ளைக் கூட்டத்தின் கண்களில் பட்டுவிட்டாலோ, சோம்பல் என்ற மயக்க மருந்தில் ஊறிவிட்டாலோ ஒருவனுடைய வாழ்வு ஓட்டைப் படகிலே, ஒடிந்த பாய்மரத்தைக் கட்டிக் கொண்டு, கடும்புயலிலே, உல்லாசப் பிரயாணம் செய்யலாம் என்றுஎண்ணிய குருடனின் செயலுக் கொப்பாகும்.

வரதன், வடுவூர் வடிவேலுமுதலியார் பண்ணையிலே வேலைக்கமர்ந்து ஆண்டுகள் எட்டு ஆகிவிட்டன. முதலியார் மனதில் என்ன நினைக்கிறாரோ அதை அப்படியே செய்துவிடுவான். அதுமட்டிலுமல்ல, அவர்பார்க்கும் இடத்திலே ஒரு வேலையிருக்கும் அவனுக்கு, தோட்டத்திலே. அந்த எட்டு ஆண்டுகளில் அவன்பெற்ற அனுபவம், ஆண்டையின் குறிப்பறிந்து எதையும் செய்வது. இப்பொழுது அவனுக்கு வயது இருபது. அவனுடைய குடும்பத்தினர் மூன்றுதலைமுறையாகமுதலியாரின்பண்ணையிலேயே வளர்ந்தனர். வரதனுடைய பெற்றோர்கள் இருந்தபோது, வரதன் அந்த ஊரிலுள்ள பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தான். ஊரில் காலரா வந்தது. வரதனுடைய பெற்றோர்கள் காலராவிற்கு இரையாகி விட்டனர். வரதனுடைய பள்ளி வாழ்க்கை ஆறாவது வகுப்போடு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. அன்றையிலிருந்து முதலியாரின் பண்ணையிலே அவனது வாழ்வு ஆரம்பமாயிற்று. வடிவேலு முதலியார் பண்ணை, பண்ணையாகவே பல ஆண்டுகள் நிலைத்திருந்ததற்கு வரதனின் குடும்பந்தான் காரணம் என்று சொல்லலாம். வரதனின் குடும்பம் வளம் பெறாததற்கு காரணம் பண்ணையாளாகவே பிறப்பிக்கப்பட்டு விட்டோம் என்றஎண்ணத்தினாலேயேதான். எட்டுமணி நேரவேலைத் திட்டம் வரதனின் வாழ்க்கையில் வராத திட்டம். அது அவனுக்கு எப்படித் தெரியும். தெரிந்தால் தான் என்ன செய்ய முடியும். பண்ணையின் வரப்பு உயர்ந்தால் தான் தன் வாழ்வு மங்காது என்று எண்ணினான். வரப்பு உயர்ந்து கொண்டு தான் வந்ததேதவிர வாழ்வு வளம்பெறவில்லை.

ஊரில் பலர் அவனுக்கு உபதேசம் புரிந்தனர். "ஒண்டிக்கட்டையாக எவ்வளவு காலம் வாழ்வது. உனக்கென்று ஒருத்தி இருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும். கலியாணம் செய்துகொள். இவ்வளவுகாலமாக முதலியார் பண்ணையில் வேலை செய்து வருகிறாயே உன் கலியாணத்திற்குப் பணம் கொடுக்கமாட்டாரா! கட்டாயம்கொடுப்பார். சீக்கிரம் ஒரு பெண் பார்த்து முடித்துக்கொள்" என்று அக்கம் பக்கம் உள்ளவர்கள் அடிக்கடி கூறுவது வழக்கம். அவைகளை வரதன் கேட்டுக் கேட்டு அவனது காதுபுளித்துப் போய் விட்டது. ஆண்டையின் மனக்கண்திறந்தாலன்றி அவன் என்ன எண்ணித்தான் என்ன செய்வது? ஊராரின் உபதேசந்தான் என்ன செய்ய முடியும்?

ஒருநாள் முதலியார் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தார். வரதனும் கூடவே சென்றான். அவர் கேட்கும் கேள்விகளுக்கு அவன் தவறாமல் பதிலளித்துக்கொண்டே சென்றான். முதலியார் அப்பொழுதெல்லாம் நன்றாகத்தான் பேசிக் கொண்டிருந்தார். அவர் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்ததும் தன்மனதில் ஊறிக்கிடந்த எண்ணத்தையும் அதேபோக்கில் வரதன் சொல்லிவிட்டான். ஆனால் முதலியாரின் பதில் அவனை நிலைகுலையச் செய்தது. முதலியாரின் பதில் அவ்விதமாக இருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. "கலியாணம் என்னடா! கலியாணம்! பேசாமே தோட்டத்தே வேலை செய்து கொண்டு வீட்டிலே பேசுகிற சோத்தை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருப்பானா? கலியாணமாம்! உனக்கு வேண்டியது உணவும் உடையுந்தானே! அதுதான் நான் கொடுக்கிறேனே. கலியாணம் செய்து கொண்டால் அவளுக்குச் சோறு, துணி எங்கிருந்துடா நீ கொடுப்பே! உலகத்திலே மனுஷனெல்லாம் பொண்டாட்டி, புள்ளையெல்லாம் விட்டு விட்டு சந்யாசியாகப் போறாங்க, நீ என்னடான்னா கலியாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லறே! கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று நினைப்பு வந்தால் உடனே தோட்டத்தில் வந்து வேலை செய்! எல்லாம் சரியாகப்போய்விடும்!" என்று சொல்லிவிட்டு வண்டியிலேறிப் போய்விட்டார்.

நாட்கள் சில சென்றன. அவன் மனதிலுள்ள புகைச்சல் சிறிதும் அடங்கினதாகத் தெரியவில்லை. அம்பு போன்ற அந்த வார்த்தைகள் வேதனையை வளர்த்துக் கொண்டேயிருந்தன. அவனது பெற்றோர்கள் வைத்துச் சென்ற சொத்து ஒரு குடிசைதான். அவனும் இத்தனை ஆண்டுகள் உழைத்த உழைப்பின் பயனாக அந்தக் குடிசையைப் புதுப்பிக்கும் நிலை கூடப் பெற முடியவில்லை. எஞ்சியிருப்பது அவனது சடலந்தான். உருக்குலைந்த உடல். உழைப்பதற்கே பிறந்தோம் என்ற நினைவைத் தவிர வேறொன்றையும் தோன்றவிடாத இதயம். அதற்கும் ஒரு வரம்பு இருக்குமல்லவா? அந்த வரம்பையும் கடந்து விட்டான் வரதன். அந்த ஊரில் புதிதாக ஒரு சங்கம் நிறுவினார்கள். சிலர் அடிக்கடி வந்து பேசுவார்கள். கூட்டங்களும் கூட்டுவார்கள். ஒருதடவை சென்றான். அவனுக்குப் பிடித்தமாகவும் கவர்ச்சிகரமாகவும் சில காணப்பட்டன. அதிலிருந்து ஒரு கூட்டம் கூடத்தவறாமல் சென்று என்ன பேசுகிறார்கள்? என்று கவனித்து வருவான் வரதன். அங்கு பேசப்படும் ஒவ்வொன்றும் ஆணிஎன அவன் மனதில் பதிந்தது. அதன் பலனாகப் புயலொன்று வரதன் மனதில் கிளம்பிற்று. சங்கத்தில் அங்கத்தினராகச் சேரவும் பிரியப்பட்டான். அங்கத்தினர் கட்டணம் அணா நான்கும் கூட ஆண்டையிடமிருந்து தான் அவன் பெறவேண்டும். ஆண்டையிடம் சென்றான்; அடிபணிந்தான், நான்கணா கொடுக்கும்படி வேண்டினான். காரணம் கேட்டார் முதலியார். சங்கத்தில் அங்கத்தினராகச் சேருவதற்கு என்று பதிலளித்தான். எந்தச் சங்கம் என்றார் சிறிது கோபத்துடன். "பகுத்தறிவு வாலிபர் சங்கம்" என்று பணிவாகச் சொன்னான். முதலியாரின் கோபம் அதிகரித்தது. அந்தப் பணத்தை என்ன செய்கிறதாம் சங்கம் என்றார் இளக்காரத்துடன் முதலியார். பொதுக்கூட்டமும் போட்டால் யாரையாவது பேசுவதற்கு வரவழைப்பதற்கும், பத்திரிக்கை, புஸ்தகம் முதலியன வாங்குவதற்

# மூட நம்பிக்கை.

-:இங்கர்சால்:-

தமிழாக்கம்: அரங்கண்ணல்.

இயற்கையின் உண்மை நிகழ்ச்சிகளுக்கு மாறாக ஒருவனால் செய்யப்படும் செய்கையே அற்புதம்.

அற்புதம் என்பதற்குக் கொடுக்கப்படும் சரியானவிளக்கம் இதுவேயாகும்.

ஒரு வட்டத்தின் சுற்றளவில் பாதியாக, குறுக்களவு இருக்கும்படியாக வைத்து, ஒருவன் ஒரு வட்டத்தை வரைந்தால் அது கோண நூலில் (Geometry) ஒரு அற்புதமாகும். இரண்டை நான்கால் பெருக்கி வந்த ஈவு ஒன்பது என்று ஒருவன் காட்டினால், அது கணக்கு நூலில் அற்புதமாகும். காற்று மண்டலத்திலிருந்து விழும் ஒருகல், முதல் வினாடியில் 10அடி இடத்தைக் கடந்து, அடுத்த நிமிடத்துளியில் 25 அடியைக் கடந்து, மூன்றாவது வினாடியில் 5 அடியைக் கடந்துபோகுமாறு ஒருவன் செய்தால், அது பூத ஆராய்ச்சியில் (Physics) அவன் விளைத்த அற்புதமாகும். நீர் வாயு (Hydrogen) பிராண வாயு (Oxygen) வெடியுப்பு வாயு (Nitrogen) ஆகிய மூன்றையும் சேர்த்து, உண்மையான தங்கத்தை ஒருவன் உண்டுபண்ணினால், அது ரசாயனத்தில் அவன் விளைவித்த அற்புதம் எனலாம்! ஒரு மந்திரி தான் கொண்டிருக்கும் மதக்கோட்பாட்டை, கருத்தை, நிரூபித்தால் அது வைதீக மார்க்கத்தில் ஏற்பட்ட அற்புதமாகும். '50சென்ட்வெள்ளிக்காசுகள் ஒரு டாலருக்குச் சமம்' என்று காங்கரஸ்(அமெரிக்க சட்டசபை) சட்டம் செய்தால், அது நிதிநிலைமையில் ஏற்பட்ட அற்புதமெனலாம். சதுரம் போன்ற முக்கோணம் அமைத்தால், தனக்கு முன்புறம் நிற்பவரின் முகத்திற்குப் பதில் பின் புறம் நிற்பவரின் முகத்தைக் கண்ணாடி பிரதிபலித்தால், விடுத்தகேள்வியின் எதிரொலி விடையாகக் கிடைத்தால், அதாவது இயற்கை முறைக்கு மாறுபட்ட, உண்மை நிகழ்ச்சிகளுக்கு முரண்பாடான ஏதாவது செயல்கள் நிகழ்ந்தால்—அவைகளை அற்புதம் என்று கூறலாம்.

இயற்கையையொட்டியே யாவும் இயங்குகின்றன; இயற்கையின் குழந்தைகளே நிகழ்ச்சிகள்; நிகழ்ச்சி உண்மையான காரணத்தாலேயே நிகழ்கிறது என்றெல்லாம் நாம் நம்புகிறோம்.

அற்புதம் என்பது அசாத்தியமானது; நடக்க முடியாதது என்பது மட்டுமல்ல, சிந்தனையுள்ள ஏந்த மனிதனாலும் சிறிது கூட சிந்தித்துப் பார்க்கவும் முடியாதவைகளாகும்.

அற்புதம் விளைந்தது, அற்புதம் விளையும் என்பதை எந்த அறிவுடைய மனிதனும் இப்பொழுது நம்பமாட்டான்.

அற்புதங்கள் என்ற நம்பிக்கை செடியாகத் துளிர்க்கும் இடம் அறியாமை என்ற மண்ணேயாகும்!

* *

நமது மூதாதையர், கெட்ட ஆவிகள்—மனித சமுதாயத்தின் விரோதிகள் என்பதான குருட்டு நம்பிக்கைக்கும்பிருட்டில் மூழ்கிக் கிடந்தபொழுது, "நல்ல ஆவிகள்" (Good Spirits) என்றவைகளையும் நம்பினர்! பேய்க்கு கெட்ட ஆவிகள் தொண்டு செய்தது போன்றே, கடவுளுக்கு இந்த நல்லாவிகள் உறவு கொண்டு இருப்பதாகவும் நம்பினர். கடவுள்பால் அன்பு கொண்ட மனிதரை, கெட்ட ஆவிகளின் பாச உணர்ச்சிகளுக்குக் கட்டுப்படாமல், இந்த நல்லாவிகள் காப்பாற்றியதாகவும்; ஜபமாலையை உருட்டிக் கொண்டு மந்திரங்கள் ஜபித்த, பட்டினி கிடந்து விரதம் அனுஷ்டித்த, தாயத்து—ரட்சை வைத்திருந்த, கடவுள் வாசிகள் மாட்டு கவலையோடு நடந்து கொண்டதாகவும் நம்பினர். விசுவாசங் கொண்டவன் மார்புக்கு வந்த அம்பையும், மார்பைத் தழுவ இருந்த கத்தியையும் இந்த நல்லாவிகள் தடுத்து நிறுத்தியதாக, நஞ்சை அமிர்தமாக்கி, கெட்ட சம்பவத்தை நல்லதாக்கி எத்தனையோ ஆயிரமாயிரம் வழிகளில் உண்மைப் பக்தனைப் பாதுகாத்ததாக நம்பினர்!

பக்தனின் மூளையில் கிடந்த சந்தேகங்களை விரட்டி, அவர்கள் மனதில் ஒழுக்கத்தையும் அன்பையும் புகட்டி, பெண் என்ற மாய வலையில் சிக்காமல் மனிதனைக் காப்பாற்றி, அறிவுப் பிரகாசத்தை அடையச் செய்து, கெட்டபேய் உண்டு பண்ணும் பாசவலைகளிலிருந்து—தந்திர ஜாலங்களிலிருந்து தப்பச் செய்து இந்த நல்லாவிகள் நன்மை செய்ததாக நம்பினர்!

இந்த நல்லாவிகள்—தேவதைகள் 'ஞானஸ்நானம்' செய்விக்கப்பட்ட குழந்தைகளை, புண்ணியவான்களை, சாமியார்களை, சந்நியாசிகளை-ஏன்?-தெருவில் திரிந்து கொண்டிருக்கும் பிச்சைக்காரர்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

---

கும் செலவளிக்கிறாங்க என்று இழுத்தாற்போல் கூறினான் வரதன். உனக்குத் தெரியாதா? என்றார் சிறிது கோபத்தைத் தணித்துக் கொண்டுபேசுகிறவர்போல் முதலியார். எனக்குந் தானுங்க தெரியும், நான் கூடத்தான் அங்கே போய்ச் சில சமயம் படிப்பதுண்டு" என்று மிகப் பணிவாகப்பதிலளித்தான். "யார்டா! அந்தச் சங்கத்தை ஏற்படுத்தினவன்" என்று வினவினார் சிறிது பயங்கரத் தொனியில். "பட்டாளத்துப் பரமசிவங்க" என்றான் வரதன்.—எண்டா! மடப்பயலே! உனக்கென்னடா சங்கம்? இன்னிக்கு சங்கத்திலே சேரப் பணம் கேட்பே; நாளை உனக்கென்னத்திற்கு இவ்வளவு பணம். தோட்டம்? எனக்கும் பாதி கொடு என்றும் கேட்பே; இல்லையா? உனக்கு இவ்வளவு துணிவு கொடுத்தது அந்தப் பட்டாளத்துப் பரமசிவமும், அந்தச் சங்கமும்: இன்னிக்கே பார்க்கிறேன் அந்தச் சங்கத்தையும் அதிலே சேர்ந்தவன்களையும். முதல்லே உன்னைத் தோலைஉறித்து விட்டுத்தான் மறு வேலை. முதலியார் கையாள் கந்தனைக் கூப்பிட்டார். கட்டச் சொன்னார் வரதனைப் பக்கத்திலிருந்த மரத்தில்; வரதன் பலமுறை மன்னிப்பு வேண்டினான். மறுக்கப்பட்டது. கையிலிருந்த பிரம்பு முறியும்வரை தன் கைவேலையைவரதன் மேல் காட்டி விட்டார். "உன்னை இந்த ஊரிலேயே வைத்திருக்கப் போவதில்லை. இனி மேல் இந்த ஊரில் உன்னைப் பார்த்தேனானால் உன் உயிர் தப்பாது. ஓடடா" என்று சொல்லி ஒரு உதையும் கொடுத்தார். அவனை அவிழ்த்து விட்டு. சிறிது தூரத்தில் நின்று பார்த்தான் தன் குடிசையை, அது எரிந்து கொண்டிருந்தது!

வலியில் நிலைமையான் வல்லுருவம், பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

—திருவள்ளுவர்.

குடி அரசு

27—3—48 சனிக்கிழமை.

# சோஷியலிஸ்ட் பிரிவு !

★

காங்கரஸ் இடது சாரிகள் என்று சொல்லிக்கொண்டிருந்த, கடைசி இடதுசாரிகளான சோஷியலிஸ்ட் கும்பலும், இப்போது காங்கரசை விட்டுப் பிரிந்து நின்று வேலை செய்வது என்று தீர்மானித்து விட்டது. ஏப்ரல் 15ம் நாள் இதற்குக் கடைசிக் கெடு என்று நாசிக்கில் கூடிய சமதர்மவாதிகள் மாநாடு முடிவுகட்டியிருக்கிறது.

ஒரு இடதுசாரியான கம்யூனிஸ்ட்தோழர்கள், பிரிவதும் சேருவதுமாக ஊடல்—கூடல், கூடல்—ஊடல் என்ற நாடகத்தை நடத்திக், கடைசியாக "நேரு சர்க்காரை ஆதரிப்போம்" என்று ஈரப்பசைதீரக் கர்ஜித்து, இப்பொழுது காங்கரசுக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று வெளிநாட்டுக் கம்யூனிஸ்ட்டுக்களின் ஆலோசனையை யேற்று முடிவு கட்டி, முதலாளி (நேரு) சர்க்காரை முறியடிப்போம் என்று முழங்கிக் கொண்டிருக்கிற காலம்.

மற்றொரு இடதுசாரியான "பார்வாடு பிளாக்" தோழர்கள் காங்கரசை விட்டுப் பிரிந்து எங்கெங்கெல்லாமோ சுற்றியலைந்து, இப்பொழுது கல்கத்தா வட்டாரத்திற்குள்ளாகவே உலாவிக் கொண்டிருக்கிறகாலம்.

"அகில இந்திய" அடிப்படையில் எந்தக் கட்சி இயங்கினாலும், அதனால் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள ஏழைப் பாட்டாளி மக்களுக்கு, கடுகளவுகூடப் பயனில்லை என்பதைக் கண்டுணர்ந்த திராவிடர்கள், இப்பொழுது பிரிந்து வேலையை மும்முரமாகச் செய்ய விருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளும் "முனைமழுங்கிகளான" அபேதவாதிகளைக் குறித்தும் ஒரு முடிவு கட்டியிருக்க வேண்டும். முடிவு கட்டியிருப்பார்கள் என்று நம்புகிறோம்.

காங்கரசின் முன்னோடும் வீரர்களாய், காங்கரசின் பெருமைக் குழைத்தவர்களாய், காங்கரசிலேயே அய்க்கியமாகியிருந்த இந்த அபேதவாத வீரர்கள் காங்கரசைப் பற்றிச் சொல்லுகிற தீர்ப்பு என்ன? இதைப் பொது மக்கள் சிரத்தையோடு கவனிப்பார்கள். ஏன்? காந்தியார் எவ்வாறு கொலை செய்யப்பட்டார் என்ற கேள்விக்கு, மனுவும் அவாவும் கூறுவது போலிருக்குமா மற்றவர்கள் கூறுவது? இப்படித்தான் எவரும் எதிர்பார்க்க முடியும்! ஆனால் சமதர்ம வீரர்கள் தந்திருக்கும் தீர்ப்பின் முழுக் கருத்தென்ன?

"கட்சியின் புதிய அமைப்புத் திட்டம் அதன் சரித்திரத்திலேயே முதல் தடவையாக, காங்கரசுக்குள் வேறெந்தக் கட்சியும் இருக்கக் கூடாது என்று திட்டமாகக் கூறிவிட்டது. கட்சியாக மாறத் தீர்மானிக்கப் பட்டவுடன் காங்கரசின் தேசியத் தன்மையும், சர்வ பிரதிநிதித்வத் தன்மையும் மறைந்து விடுகிறது. அது ஒரு கட்சியாகி விடுகிறது. சர்வ பிரதிநிதித்வக் கட்சியாக மாறக் காங்கரஸ் செய்யும்முயற்சியால், அது தொழிலாளர் கட்சியாக ஆவதற்கு மறுக்கிறது" இக்காரணம் தான் அபேதவாதிகள் காங்கரசிலிருந்து பிரிவதற்குக் கூறுவதாகும்.

அதாவது காங்கரஸ் 100-க்கு 85 பேராக இருக்கும் தொழிலாளிகளுக்குப் பிரதிநிதி ஸ்தாபனமல்ல. முதலாளிகளுக்கும் நல்ல பிள்ளையாக நடக்கிறது என்பது அதன் திட்டம். சுருக்கமாகச் சொன்னால், நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது அது ஒரு வகையாருக்கே பிரதிநிதித்துவமான கட்சி. இவ்வாறு சொல்லுகிறார்கள் சோஷியலிஸ்டுகள்.

அறிவு கெட்ட சோஷியலிஸ்டுகளே! இத்தனை வருஷங்கழித்து இந்த முடிவைத்தானா கண்டுபிடித்தீர்கள்? இது மிக மிகப் பழைய முடிவல்லவா? என்று வெள்ளையர்கள் இப்போது வினவவில்லை. திராவிடர் கழகமோ, ஜின்னா சாகேப்போ, சுபாஷ்போஸோ, ஏன் கம்யூனிஸ்ட்களோ இப்போதுகேட்கவில்லை. ஆனால் உண்மைஎன்ன?

காங்கரஸ் இந்தியாவின் ஏகப் பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்பது உண்மைக்கு மாறுபட்டது. இதைத்தான் என்னாட்சியில் கண்டேன் என்று சொல்லிவிட்டான் வெள்ளையன்.

காங்கரஸே—இந்தியா இந்தியாவே—காங்கரஸ் என்பது எவ்வளவு பெரிய பொய்! இதை விளக்கிக் கொண்டிருப்பது தானே பாகிஸ்தான் என்று கூறிவிட்டார் ஜின்னா சாகேப்.

காங்கரஸ் முதலாளிகள் ஸ்தாபனம் என்பது சரிதான்! ஆனால் ஒரே ஒரு விளக்கம்! பொருள் முதலாளிகள் பிறவி முதலாளிகள் ஆகிய இருவகை முதலாளிகளின் கூட்டு ஸ்தாபனம் காங்கரஸ் என்றது திராவிடர் கழகம்.

என்னுடைய வெற்றியைத் தன்னுடைய தோல்வி என்று பாராட்டிய காந்தியாரைப் பெற்ற காங்கரஸ், முதலாளிகளின் வளர்ப்புப் பண்ணை என்கிற உண்மையை விளக்குவதுதானே என்னுடைய "பார்வார்டு பிளாக்" என்று முழக்கஞ்செய்தார் தோழர் சுபாஷ் போஷ்.

எங்களுக்கு ஞானோதயம் ஏற்பட்ட பொழுதெல்லாம், நாங்களும் காங்கரசை ஏகப்பிரதிநிதித்துவம் உடையதல்ல என்று சொல்லவில்லையா? என்று கேட்கலாம் கம்யூனிஸ்ட்டுகள்.

இவர்கள் இத்தனை பேரும் பல காலத்திற்கு முன்னால் கண்டுபிடித்த கண்டுபிடிப்பைத் தான், அப்பொழுது அந்தக்கண்டுபிடிப்புகளைக் குறை சொல்லி, கண்டுபிடித்தவர்களைக் குறை சொல்லி வந்த சமதர்ம வீரர்கள்தான், இப்போது அந்தக் "கண்டு பிடிப்பிலே" சமதர்மம் என்கிற ரீதியில் வந்திருக்கின்றார்கள். இக்கண்டுபிடிப்பு பொருளற்றது என்று நாம் கூறவில்லை, ஆனால் புதி

தல்ல என்பதுதான் இங்கு நாம் வற்புறுத்த விரும்புவது.

காங்கரசை விடுத்துச் சோஷியலிஸ்டுகள் பிரியப் போகின்றார்கள் என்றால், இதற்கு முந்திய அவ்விருவரின் கூட்டுறவைப் பொது மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தோழர் சுபாஸ் போஸ் அவர்கள் காங்கரசைக் கைவிட்ட பிறகு, காங்கரசைச் சமதர்மப் பாதைக்கு இழுக்கின்றோம் என்றவர்கள் தான் சோஷியலிஸ்ட்டுகள். அதாவது சுபாஷ் போஸ் இடத்திற்குப் புகுந்தவர்கள்—புகுத்தப்பட்டவர்கள்தான் இந்தச் சோஷியலிஸ்டுகள். 42 ஆகஸ்ட்டுதான் இவர்களை இந்தியாவுக்கு நன்றாக விளம்பரப்படுத்தியது. "கம்யூனிஸ்டுகள் செல்வாக்கைக் கரைக்க வேண்டும்" "பார்வர்டு பிளாக் வார்த்தைகளில் மக்கள் மனம் பறிகொடுத்துவிடக்கூடாது" "காங்கரசென்றால் கைலாயமும் வைகுந்தமும் அதற்குள்தான் அடக்கம் என்று பாமரன் நம்ப வேண்டும்" இதற்குச் சோஷியலிஸ்ட்டுகள் கருவியாக இருக்க வேண்டும் என்பதுதான் காங்கரஸ் தலைமை பீடங்களின் கருத்து. இவ்வுண்மைகளைத் தெரிந்துதான் சோஷியலிஸ்டுகளும் கருவியாக இருந்துவர உடன்பட்டு வந்திருக்கின்றார்கள். இது பழைய நிலைமை. அதாவது காங்கரஸ்-வெள்ளையர் போராட்டம் நிகழ்ந்த காலத்து நிலைமை. இப்போது புது நிலைமை. அதாவது காங்கரஸ்-வெள்ளையர் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் நிலைமை. இந்தப் புது நிலைமை ஏற்பட்ட பிறகு காங்கரசுப் பட்டேலிஸம் "உனக்கும்பேப்பே! நொப்பனுக்கும் பேப்பே!" என்று சொல்லி சோஷியலிஸத்தைத் துரத்தியது! மருட்டியது! பின் பங்குதருகிறேன், பதற்றமாகப்பேசாதே! என்றது. தருகிற பங்கை வேண்டாமென்றா சொல்லி விடுவேன் என்று தலையாட்டியது சோஷியலிஸம். இதற்கிடையிலே காந்தியார் மறைவால் காங்கரசின் புது அமைப்பு-அதன் விளைவு சோஷியலிஸ்ட் பிரிவுஎன்கிற நாடகம். இத்யாதி உறவு நிலையைப் பொது மக்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். உணர்ந்து பார்ப்பது பல உண்மைகளை விளக்கும் என்பது உறுதி.

நமது மாகாணத்தை எடுத்துக் கொண்டால், இங்கு சோஷியலிஸ்ட்டுகள் என்று சொல்லிக் கொள்பவர்களில் பெரும்பாலோர் பார்ப்பனர்கள்! அதுவும் "உயர்ந்தவன் நான்" என்பதை உணர்த்தும் பூணூலைஉள்ளக்களிப்புடன் பூண்டிருப்பவர்கள்! தாழ்ந்தவர் மேலேறச் சார்த்தி வைத்திருக்கும் ஏணிகளைக்கூட எடுத்தெறிய வேண்டுமென்கிற புண்ணியவான்கள்! இவர்களைஆட்டி வைக்கிற தலைமைப் பீடமோ ஜெயப்பிரகாஷ் என்ற பார்ப்பனர்! இவரோ காந்தியாருக்குப் பிறகு ரமண ரிஷியும், அரவிந்தரும், காங்கரசின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்கிற திட்டத்தை வழங்கிய அரசியல் ஞானி! இந்தக் கருத்துக்களையும் சேர்த்துத் திராவிட மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

சோஷியலிஸ்டுகள் கண்டு பிடித்திருக்கிற கண்டு பிடிப்பு புதிதல்ல! காங்கரசின் மீது இவர்கள் சாட்டுகிற குற்றச்சாட்டு காங்கரசுக்கு இல்லாத தொன்று அல்ல! ஆனால் இவர்கள் சாட்டுகிற இக்குற்றச்சாட்டுக்குஇத்தனைநாளும் உடந்தையாயிருந்த சமபங்காளிகளே இவர்கள்! இன்று இவர்கள் "நாங்கள் பிரிகிறோம்" என்றால் இதற்கு நிச்சயமாக வேறு அர்த்தமுண்டு!

"சுதந்தரத்தையே தாரக மந்திரமாகக் கொண்டு வளர்ந்த காங்கரஸ், அச்சுதந்தரக் கோரிக்கை நிறைவேறியவுடனே அது உயிருடன் இயங்குவதற்கு இயலாது. இயங்குகிறதென்றால் இன்னும் சுதந்தரம் இல்லை என்பது தான் பொருளாக இருக்கமுடியும். "சுதந்தரம் பெற்றுவிட்டோம்! காங்கரசும் உயிரோடிருக்கவேண்டும்!" என்பது செயலுக்குப் பயன்படாதது. காங்கரஸ் செயலுக்குப் பயன்படவேண்டுமானால் அதனுடையதிட்டம், நடவடிக்கை மாறவேண்டும்"

இவ்வாறு தேசிய வாதிகளே பேசிவருகிற காலமிது. இக்காலத்தில் நாங்கள் பிரிகின்றோம் என்றால், அதுவும் காங்கரசை ஒரு கட்சியாக ஒப்புக்கொண்டு அதற்கு நாங்கள் ஒரே ஒரு எதிர்க்கட்சியாக இருப்பதற்காகப் பிரிகின்றோமென்றால்இதற்கு, உண்மையான பொருள் என்ன?

அகில இந்திய அமைப்பில், வர்க்கப் போராட்டத்தினாலேயே தொழிலாளி துயர் துடைப்போம் என்று கூறி, தங்கள் துயரைத் துடைத்துக்கொண்டு வரும் கம்யூனிஸ்ட்டுகள் ஒரு கட்சியினராயிருந்து வரும்போது, அந்த வர்க்கப்போராட்டமே எங்கள் திட்டம் என்று கூறிக்கொள்ளும் இந்தச் சமதர்ம வீரர்கள் தனியாக ஒரு எதிர்க்கட்சியாயிருக்கப் போகிறோம் என்றால், அதுவும் கம்யூனிஸ்ட்களை ஆபத்தான பிரகிருதிகள் என்று சொல்லிக்கொண்டிருக்கப்போகிறோம் என்றால், இதற்கு நேர்மையான பொருள் என்ன இருக்க முடியும்?

ஸ்தல ஸ்தாபனம், முனிசிபல், சட்டசபை ஆகிய இடங்களில் காங்கரசின் பெயர்களால் புகுந்திருப்பவர்கள் விலகிக்கொண்டு விடுவார்களாம்! ஆனால் நியமனம் பெற்றுப் பதவிகளில் இருக்கிற சோஷியலிஸ்டுகள் நிலையாகவே இருப்பார்களாம்! உண்மையாகவே காங்கரசோடு ஒத்துழையாமையை மேற்கொண்டு விட்டது சோஷியலிஸ்ட்டு என்பதற்கு இது தானா பொருள்?

முதலாளிகளின் ஆதரவைக் கொண்ட வகுப்புவாதிகளும், மதவாதிகளும் இப்பொழுது பெரிய ஆபத்தாக இருக்கிறார்கள் என்று கூறி, அந்த வகுப்புவாதிகளே காங்கரஸ் ஆட்சிப் பீடத்தை ஆட்டி வைக்கிறார்கள் என்று விளக்கி விட்டு, வகுப்பு வாதத்தை எதிர்த்துப் போராடுவதில் காங்கரசுடன் சேர்ந்து ஒத்துழைப்போம் என்றால் இதற்குப் பெயரா பிரிவு என்பது? அல்லது நேர்மை என்பது?

சுதந்தரம் பெற்றபின் காங்கரசுக்கு வேலை இல்லை என்றான பிறகு, காங்கரசே நாட்டை ஆளுவது என்ற நிலையினால் ஏழைப் பாட்டாளியின் ஏழ்மை நீங்குவதற்கு எள்ளு மூக்கத்தனை கூட காங்கரஸ் அரசாங்கம் முயற்சிக்க முடியாது என்றான பிறகு, காங்கரசைக் காட்டித் தொழிலாளர்கள் ஆதரவைப்பெற முடியாது என்று எண்ணிய பனியா—பார்ப்பனக் கூட்டு முயற்சியே—மறுமலர்ச்சியே இந்தப் பிரிவு நாடகம் எனலாம்.

நம்முடைய பார்ப்பனத் தோழர்கள், இத்தனை நாளாகச் சுயராஜ்ஜியம்! சுயராஜ்ஜியம்! என்று கூறி, பயனில்லாத மோட்ச வேட்கையை மக்களிடத்தில் கிளப்பியது மாதிரி பித்தலாட்டச் சுயராஜ்ஜிய வேட்கையைக்கிளப்பித், தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இனிமேல் அப்படிச் செய்ய வழியில்லை என்

பதை உணர்ந்து, சமதர்மம்! சமதர்மம்! என்ற பித்தலாட்டச் சமதர்ம முறையைப் பெருங்குரலெடுத்து முழக்குவார்களேயானால் அது ஆச்சரியப்படத் தக்கதில்லை என்பதே நம் கருத்து. பிறப்பு முறையினாலேற்பட்ட பேதம், சாஸ்திரங்களில் மட்டுமல்ல சட்டத்திலுமாகும் அமுல் நடத்தப் பட்டு வருகிற வேளையில், அதை உணர்ந்து அதைப் போக்க வேண்டுமென்பதிலோ, அதை அழிப்பது தான் மக்கள் கடைத்தேறும் வழி என்பதிலோ, விருப்பமோ, நம்பிக்கையோ இல்லாத சமதர்ம வாதிகளாய் இருப்பதால், பார்ப்பனர்களுக்கு உண்டாகும் கெடுதல் தான் என்ன? பார்ப்பனர்களின், முதலாளிகளின் பாதுகாப்புக்குத் தேசியப் போர்வை இனிப் பயன்படாது! ஆதலால் சமதர்மப் போர்வையை இப்பொழுது போர்த்திக் கொள்ள ஆரம்பித் திருக்கின்றார்கள்! இதுதான் இந்த நாடகத்தின் உண்மையான விளக்கம் என்று கூறுவோம்.

இன்னும் விளக்கமாகக் கூற வேண்டுமானால், பட்டேலிஸத்தின் கண் சிமிட்டலால் இப்பிரிவு நாடகம் நடக்கப் போகிற தென்றுதான் நாம் கூற வேண்டியவர்களாயிருக்கின்றோம். பலப் பல பெயர்களால் பல கட்சிகள் ஏன் இருக்க வேண்டும்? அவ்வெல்லா வற்றையும் ஏன் அழித்து விடக்கூடாது? என்ற சிந்தனையின் முடிவுதான் இந்த நாடகம் இப்பொழுது காட்டப் படுவதன் அவசியம் என்று கூறலாம்.

எல்லாக் கட்சிகளையும் அழித்துவிட வேண்டும்! ஆனால் வெளிப்படையாகக் காங்கரசோ! காங்கரஸ் சர்க்காரோ! அவ்வேலையில் இறங்கியிருப்பதாக வெளியுலகம் தெரியக் கூடாது. அதற்கு ஒரு கட்சி தேவை! அதுதான் இது! என்றெண்ணலாம் பட்டேலிஸம்.

இவ்வெண்ணத்தை நிறைவேற்றப் பார்க்கிறோம் என்று உறுதி கூறலாம், இந்த நாட்டுப் பார்ப்பனீயச்சோஷியலிஸம்! ஆனால் சம வுரிமையை முதலில் ஒத்துக் கொள்ளாத, சமவுரிமையைப் பெறுதலே முதலில் மனிதஉரிமை என்பதை மதிக்காத, இந்தச் சழக்கர்களின் கைவரிசை வெற்றி பெறுமா? இவர்களின் சூழ்ச்சிக்குத் திராவிடத்தில் இடமில்லை

என்பதை மட்டும் நாம் உறுதியாய்க் கூறுவோம். வடநாட்டு இறக்குமதியால் வயிறு வளர்க்கும் கூட்டம், இன்றுஜெயப்பிரகாசரை இறக்குமதி செய்து, திக்விஜயம் செய்யவைத்திருக்கிறது. அவசியம் ஏற்பட்டால் இதைப்பற்றிப் பிறகு கூறுவோம்.

# "பிள்ளையோ பிள்ளை"

"மதுரை மன்னன்"

[காதல் கதைகளாகவே எழுதும் எழுத்தாளர்களுக்குப் போட்டியாக எழுப்பிய இது கற்பனையே. இக்கதாபாத்திரங்களை எங்குமே சந்திக்க முடியாது.]

★

கதிரவனின் பொற்கிரணங்களால் புறக்கருப்புதான் நீங்குமே தவிர, அகக் கருப்பு நீங்காதென்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கியது அந்தவீடு. அந்த வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்றால், முனிச்சாலைரோடு வழியாக இருபது கஜதூரம் வரவேண்டும். பின்ஒரே ஒரு ஆள்தான் நுழையக் கூடிய ஒரு சிறு சந்து. பக்கத்தில் முனிசிபல் விளக்கு, பாதாளக்குழாய், குழாயை ஒட்டி ஒருவீடு, அதற்கடுத்த காம்பவுண்டில தான் நாம் குறிப்பிடும் அந்தவீடு பதினெட்டில் ஒரு பாகமாக இருக்கிறது.

அதோ அவன்தான் நம் கதாநாயகன் நடராசன். குட்டையாகவும், கருப்பாகவும் ஹிட்லர் மீசை வைத்துக் கொண்டு சிரிக்கிறானே, அவன்தான் நடராசன். அவன் நம்மைப்பார்த்து ஏதோ சொல்லுகிறான். கவனியுங்கள்.

**நடராசன் நவில்கிறான்:—**

எனக்குக் கல்யாணமாகி இரண்டரை வருஷங்கள் கடந்துவிட்டது. ஆசைக்கு ஒருபிள்ளைகூட இல்லை. என் அம்மாவேறு சண்டை போடுகிறாள். வருஷம் மூணு ஆகப் போவுது, குழந்தைகுட்டி ஏதாவதுஇருக்கிறதா? என்று குத்தலாகக் கேட்கிறாள். வீட்டுக்கு வந்தவ, அப்படியிருந்தா நானென்ன செய்யட்டும்? அக்கம் பக்கம் பார்க்காதே! கிணற்றுப் பக்கம் போகாதே! எதிர்த்த வீட்டுக் காரனோடு பேசாதே! என்று சொன்னால் கேட்டால்தானே! நான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சொல்லுகிறாள். என்னைப் பொறுத்தவரையில் சோறு போடுகிறேன், துணிமணி வாங்கிக் கொடுக்கிறேன். இதை வைத்து, வீட்டுச் சத்தம் வெளிக்குத் தெரியாமல் காலங்கடத்தினால் என் குடும்பம் எவ்வளவு நல்ல நிலையிலிருக்கும்?

இன்று அம்மாவோடு சண்டை பிடிப்பாள். நாளை அப்பாவோடு ராமபாணம் தொடுப்பாள். மறுநாள் என்தங்கைமீது......இப்படியாகச் சண்டைமேல் சண்டை தான்!

இரவு நேரங்களை ஏகாந்தமாய்க் கழிக்கலாம் என்று கூறினால், தொந்தரவுதான்! தொந்தரவு செய்ய வந்து விடுவாள். பிள்ளை வேண்டுமாம் பிள்ளை! கொஞ்சநாட்கள் பிள்ளையில்லாமலிருந்தால் தான் என்ன, குடி முழுகியா போய் விடும்?

**சுந்தரவல்லி சொல்கிறாள்:—**

என் அம்மாவை எவ்வளவோ பிடிவாதம் செய்தேன். கலியாணம் இப்பொழுது வேண்டாம் இரண்டாவது தாரமாயிருக்கச் சம்

[7ம் பக்கத் தொடர்ச்சி]

களைக் கண்காணித்துக்காப்பாற்றி வந்தன, அவர்கள் பக்தியுள்ளவர்களென்பதால்! என்றும் நம்பப் பட்டது.

இந்த ஆவிகள் ரகம் பலதரமாகும். சில ஒரு காலத்தில் ஆண் அல்லது பெண்ணாக யிருந்திருக்கும்! சில இந்த உலகத்திலேயே இருந்திருக்காது! சில தொடக்கத்திலிருந்தே தேவதையாக இருந்திருக்கும்!!

தேவதைகள் என்றால் உண்மையாக என்ன? பார்வைக்கு எப்படியிருந்தன? எப்படி இடம் விட்டு இடம் மாறிச்சென்றன? எங்ஙனம் மனிதன் மூளையைத் தங்கள் வசம் கட்டுப்படுத்தின— அல்லது பாதிக்கச் செய்தன?— என்பது பற்றி யாருக்கும் புரியவும் புரியாது, தெரியவும் தெரியாது!

(வரும்)

தூத்துக்குடியில் மே மாதம் 1, 2-தேதிகளில்

**திராவிடர் கழக 18-வது மாகாண மாநாடு நடைபெறும்.**

★

திராவிட நாட்டுத் தலைவர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் எல்லோரும் வருகிறார்கள்

அனைவரும் திரண்டு வருக !!

கே. வி. கே. சாமி, செயலாளர்.

மதிக்கமாட்டேன் என்று! கேட்டால் தானே! காதல் கல்யாணம் நடக்கவேண்டிய இக்காலத்தில், இரண்டாந்தாரம் என்ற அடைமொழியுடன் என் கழுத்தில் தாலி யேறிவிட்டது, கட்டாயமாக! இச் சமூகம் பொல்லாதது போலும்.

சிவப்பும் அழகும் பொருந்திய நான் சீரழியத்தான் வேண்டும் போலிருக்கிறது? கழுதை தான் உதையும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். என் கணவனும் உதைவார் என்று இப்பொழுது தான் தெரிகிறது. கணவனா அவன்! இல்லை. சுத்த அம்மாஞ்சி!

எதிர் வீட்டுக் 'கனகாம்புஜம்' கேலி செய்தது இன்னும் என் நினைவிலிருக்கிறது! இரண்டரை வருஷமாகியும் ஒரு குழந்தையைக் கூடக்காணோம். இவள் மலடி போலும்! என்று என்னைக்குத் தாமல் குத்துகிறாள்.

பெண்ணுலகம் பேணும் இந்தக் காலத்தில் என்னைப் பற்றி எழுத யாரிருக்கிறார்கள்? இன்று புருஷன்உதைத்தால், நாளைமாமி அரிவாள்மனையைத் தூக்குவாள். மறு நாள் மாமனாரின் 'கொண கொணக்' கூச்சல். உயரமும், அழகும், நிறமும் இல்லாத என் நாத்திக்குக் கூட இளப்பமாகி விட்டேன்.

வீட்டிலே எனக்கு மட்டும் 144. நின்றால் உதை! குனிந்தால்குத்து! பிள்ளைக்காக நாளை ஊருக்குப் போகவேண்டுமாம்!

சீனிவாசன் செப்புகிறார்:—

நேற்றுத்தான் ஒரு 'ஷோக்' குட்டி என்னிடம் வந்தாள். அவள் கணவன் பார்ப்பதற்கே விகாரமாயிருந்தான். நேற்றுஇரவு பூராவும் என் அறையில்தான் சுந்தரவல்லி என்னும் செந்தாமரையிருந்தாள். குழந்தை உருவாக, மந்திரம் ஓதி விட்டேன். தாசி வீடு செல்லும் மைனர்கள் பணத்தை அவளுக்கே அள்ளி வீசுகின்றனர். எனக்கு அந்தக் கவலையில்லை. ஏனென்றால் 'சாமியார் நல்லவர்' எனும் பெயரெடுத்திருந்தேன். அவனுக்கு வயது முப்பத்தைந்து. அவளுக்கோ பதினேழு வயதுதான். அழகானவள். இன்னும் பத்துத் திங்களில் அவள் தாயாகிவிடுவாள். அக்குழந்தைக்கு நான்தான் தந்தை!

காலம் என்னும் மரத்திலிருந்து ஒருதடவை 'சருகு' உதிர்ந்தது. ஆண்டு ஒன்று கழிந்து விட்டது என்று அறிவித்தது மார்கழி மாதம்! அவள்—சுந்தரவல்லி ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள். அவள் அக்குழந்தையை உரிமை பாராட்டுகிறாள் தன் குழந்தை என்று! ஆனால் அவன்-நடராசன், தன் குழந்தையென்று உரிமை பாராட்ட முடியுமா? பிள்ளை வரங் கிடைத்த அந்த இரவை இன்னும் எதிர் நோக்குகிறாள். அந்த இன்பம்காண ஏங்குகிறாள். அவள் உருசி கண்ட பூனையல்லவா?

சமூகம் சிரிக்கிறது.

அஹ்ஹ.........ஹஹ்ஹ.........ஹா! என்ன உலகமடா இது? இப்படிக் குழந்தைகள் ஏராளம் பெற்றுவிடலாமே! அப்பிள்ளை தாயை விபசாரியாக்கி, தந்தையை 'டாப'ராக்கிப் பிறந்ததல்லவா? ஆம்! அதற்குத் தந்தை நடராசன் என்று உறுதிகூற முடியுமா?—வெட்கமில்லை! தகப்பனறியாத் பிள்ளை தான் இப்பொழுது அவள் கையிலிருப்பது! சாமியாரின் வாரிசு! நடராசனுக்குச் சம்பந்தம் ஏது? சுந்தரவல்லி! இனி நீ மலடியல்ல! பிள்ளைக்காரி!—தாய். போதுமா?

பிள்ளையில்லாத குறை நீங்கி விட்டது. நீங்கள் இப்படி, பிள்ளைகளைவிரும்புகிறீர்களா?வேண்டாம். எனக்காக அஞ்சுங்கள். அமெரிக்காவைப் பாருங்கள்! கையிலிருக்கும் இதைக் கவனியுங்கள். உங்களுக்குத் தேவையா? பிள்ளையோ பிள்ளை..............!

**"தொழிலாளி"**

மாதப் பத்திரிகை.

"நாட்டைக் குழப்பத்தில் சுழலவிட்டிருக்கும் தனிவுடைமைத் தனத்தைப் பொதுவுடமையாக்க வேண்டிய அவசியத்தை அழுத்தமாக்குவதற்காக "தொழிலாளி" ஜெனனமாகியிருக்கிறது. விறுவிறுப்பான பாஷை. பாட்டாளியின் உயிரைப் பறித்து, உடல் உப்புகிற ஒரு கூட்டத்தின் முதுகை பிய்த்து வாங்குவதோடு, நிறவெறியரின் தோலையும் உறித்துக்கட்டுகிறது. 'சவுக்கடி'! ஒரு வரியைக்கூட விடாமல் படிக்கவேண்டிய பத்திரிகை தொழிலாளி! ஒவ்வொரு வரியும் ஹிருதயத்தை நெருடி விட்டு, உணர்ச்சியை எழுப்பி, தியாகத்திற்குக் கொண்டுபோகிறது. தொழிலாளி வர்க்கத்தின் எதிர்காலத்தை விரைவில் விடிய வைக்க ஆசிரியர் ரத்தினசபாபதி சக்தியுள்ள சாரதி யென்பதற்கு தொழிலாளியே சாட்சி!"

மேலே கண்டுள்ளது நமது சொந்தப் புகழுரையல்ல. தகுதி வாய்ந்த "தமிழ்நாடு" (மதுரை) வாரப்பத்திரிகையின் தராசு முனையில் நிறுத்த மதிப்புரையாகும்.

தனிப்பிரதி அணா 2.

இதுவரை இல்லாத இடங்களில் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

(விரைவில் வாரப்பதிப்பாக வெளிவரும்)

"தொழிலாளி" காரியாலயம்,
உரிகம் போஸ்ட், கோலார் தங்கவயல்.

[5ம் பக்கத் தொடர்ச்சி]

யென்றால், பெய்தது மழை? நல்ல தங்காள் சொல்லியா, அனுசூயா கூறியா, என்ற ஆராய்ச்சியிலேயே முடிவுகாண முடியாதிருக்கின்றோம்!

அங்கு பனிக்கட்டியாக உறைந்து கிடக்கும் கடலிலே, கப்பலைச் செலுத்த முடியுமா? என்ற முயற்சியிலே ஈடுபட்டு, இப்போது வெற்றி பெற்று விட்டார்கள்!

இங்கு நாம் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பரந்தாமனின் திரு அவதாரத்தின் பெருமையைப் பற்றியும், அய்யனின் கால்களை அன்போடு அமுத்திக் கொண்டிருக்கும் அன்னையின் அங்கலட்சணத்தின் அழகு பற்றியும் பேசுகிறோம். மகாவிஷ்ணுவின் நினைவாக, பாதம் உள்ள நாமம் போடுவதா? பாதம் வைக்காத நாமம் போடுவதா? என்ற சர்ச்சையிலே இன்னும் முடிவுகாணாமல் இருந்து வருகின்றோம்.

அங்கு செத்தவர்களைப் பிழைக்க வைக்க முடியுமா என்ற ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருக்கின்றனர்.

இங்கு நாம் உயிரோடு கைலாயம் செல்ல முடியுமா என்ற ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்!

அங்கு எதையும் என்? எப்படி? எதற்கு? எனக் கேட்கிறார்கள். அதற்குக் காரணமும் கண்டறிகிறார்கள்!

இங்கு நாம் என்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகட்கு முன்கூட்டியே, 'விதி' என்ற பதிலை ஏற்படுத்தி வைத்து காரணமறியும் திறனின்றி இருக்கிறோம்!

எனவேதான் அவர்கள் ஆளுகிறார்கள்! நாம் வாழுகிறோம் நடைப்பிணங்களைப்போல!

இந்த நிலையை நீடிக்கவிடுவது சரியல்ல! அது தவறு என்பது மட்டுமல்ல! ஆபத்தும்கூட! மற்ற நாடுகள் விஞ்ஞானத்திலும், பொருளாதாரத்திலும் மின்சார வேகத்தில் முன்னேறுகின்றன. நாம்மட்டும் இருட்டுக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறோம். நமது அண்டையிலுள்ள வடநாடு போருக்குப் பின் பொருளாதாரத் துறையிலே அய்ரோப்பிய நாடுகளுடன் போட்டியிடக் கூடிய அளவு முன்னேறியிருக்கிறது. நம்நாடு·பொருளாதார வளர்ச்சியிலே குன்றிப்போய் இருக்கிறது. இந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வை வளர விட்டால், நாம் என்றென்றைக்கும் மீளமுடியாது.

நம் நாட்டிலே எல்லாவித வசதிகளும் உண்டு! இயற்கையளித்த இந்த வசதிகளை நாம் பயன்படுத்திக் கொள்ளும் நினைப்புக்கூட இல்லாமல் இருக்கிறோம். வடநாட்டு வணிக மன்னர்கள் நம் நாட்டில் கிடைக்கும் பொருள்களை எப்படிப் பயன்படுத்துவதுஎன்ற நினைப்பிலே இருக்கின்றனர்!

"இந்தியாவில் திருவாங்கூரில் ஏராளமான அளவுக்கு தோரியம் கிடைக்கிறது. கயா, மாங்கீர், ராஜபுதனம், சேலம் இன்னும் மற்றுமுள்ள சென்னை ஜில்லாக்களில் ஏராளமான அளவு உரோனியம் இருக்கிறது. உரோனியம், தோரியம் ஆகிய இரண்டு உலோகங்களே, அணுச்சக்திக்கு வேண்டிய மூலப் பொருள்கள். இதில் சர்க்கார் கவனம் செலுத்தி, ஆராய்ச்சி செய்தால் பெரும் பயன் அடையலாம். ஒரு ரெல் எடையுள்ள உரேனியத்தினின்று அடையும் அணுச்சக்தி, நூற்றுக் கணக்கான டன் நிலக்கரியை எரித்து உண்டாக்கும் சக்திக்குச் சமமாகும்" என்பதாக மார்ச் 15-ல், டாக்டர் மேகநாத்ஷா என்பவர் கல்கத்தாவில் பேசியிருக்கிறார்!

சேலத்திலே உரேனியம் கிடைக்கும் சங்கதி சேலம் வாசிகளுக்கே தெரியாது! ஆனால் சேலத்திலே மூடிக்கிடக்கும் பொருள்பற்றி கல்கத்தாவிலே பேசப்படுகிறது! நம்நாட்டிலே என்னென்ன கிடைக்கும்? அதனால் என்னென்ன நன்மைகள் செய்ய முடியும்? என்பது பற்றிநமக்குத் தெரியவில்லை! அப்படித் தெரிந்தாலும் அதிலே அக்கரை இல்லை! ஆனால் வட நாட்டாருக்குத் தெரிகிறது நம் நாட்டு வளப்பம் பற்றி! நம் நாட்டைப் பற்றி நினைக்கும் போதே நாக்கிலே நீர் சுரக்கிறது வடநாட்டாருக்கு!

சென்னை மாகாணத்தின் பெரும் பகுதிகளில் கிடைக்கும் உலோகப் பொருள்களைத் தோண்டியெடுத்து, தொழிற்சாலைகள் ஏற்படுத்தி, அப்படி எடுக்கப்பட்ட மூலப்பொருள்களைக் கொண்டு அணுச்சக்தியை உண்டாக்கி, உலகத்தையே தங்கட்கு மார்கட்டாக்கிக் கொள்ளும் நினைப்பு வடநாட்டிலே வளருகிறது! வெறும் நினைப்போடு காரியம் நின்று விடாது! இந்த வேலையைச் செய்ய ஒரு கமிஷன் நியமிக்கப்படும்! அந்தக் கமிஷன், "சென்னை மாகாணத்திலே கிடைக்கும் உரேனியத்தைக் கொண்டு அணுச்சக்தி உண்டாக்கச் செய்யும் முயற்சிக்கு இந்தியயூனியன், ஆதரவும் அனுமதியும்தரவேண்டும்" எனத்தீர்மானிக்கும். இந்திய யூனியனின் அனுமதியோடும், ஆதரவோடும் வடநாட்டு வணிகவேந்தர்கள், சென்னை மாகாணத்திலே அணுச்சக்தி தயாரிக்கும் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்துவார்கள். அந்தத் தொழிற்சாலைகளில், சென்னை மாகாண மக்கள் வேலைசெய்வார்கள்! இந்தக் காட்சியை மனக்கண்முன் சித்திரித்துப் பாருங்கள்! இந்தக் காரியத்தை நடக்கவிட்டால், நம்நாடு பொருளாதார முன்னேற்றம் அடைய முடியாது! இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் செய்யச்சென்னை சர்க்காரால், தற்போது உள்ள நிலைமைப்படி முடியாது. மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்குக் கட்டுப்பட்டுத்தான் நடந்தாகவேண்டும்! மத்திய சர்க்கார், வடநாட்டாரின் ஆதிக்கத்திலே இருக்கிறது;எனவே நம் நாட்டை, வடநாட்டார் சுரண்டுவதை மத்திய சர்க்கார் தடுக்க மாட்டார்கள்! ஆகையால், நம் நாட்டுக்கும், வடநாட்டுக்கும் இருந்து வரும் பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகரித்துக் கொண்டே போகும். கடைசியில் நம் செல்வம் அன்னியரால் சுரண்டப் பட்டு, மீளமுடியாத ஏழ்மைக்கு நம்நாடு சென்று விடும்! பிறகு சொந்த நாட்டிலே வாழ்க்கை நடத்த வழியின்றி, சிங்கப் பூருக்கும், சிலோனுக்கும், மலேயாவுக்கும், கூலிகளாய் நம் நாட்டு மக்கள் சென்று தீரவேண்டிய நிலை ஏற்படும்! இந்த நிலைமை ஏற்படாதிருக்க வேண்டுமானால் அதற்கு ஒரு வழிதான் உண்டு! நம் நாட்டைப் பிரித்து விடுவது! நமக்கென்று ஒரு தனியரசு ஏற்படுத்திக் கொள்வது! இது நமக்கு மிக மிக அவசரமானது!

உடனடியாக நாம் செய்ய வேண்டியது, நமக்குள் உள்ள மனவேறுபாட்டை மறந்து, நமக்கு ஏற்பட்டிருக்கும் இந்த மகத்தான ஆபத்தை நாமெல்லோரும் ஒன்றுபட்டு உறுதியுடன் ஒழிக்கவேண்டும்! நமக்குள்ளிருக்கும் குரோத எண்ணத்தை வளர விடாமல், நமக்கு இன்று ஏற்பட்டிருக்கும் பொது எதிரியான வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழிக்க ஒன்றுபடவேண்டும். இந்தச்சமயத்தை நாம் நழுவ விட்டால் பிறகு நமக்கு என்றுமே மீளமுடியாத பொருளாதாரச்சரிவு' ஏற்பட்டு விடும்! கடமையை உணர்ந்து காரியமாற்ற இளைஞர்களே ஒன்றுபடுங்கள்!

## தீமிதிப்பதில் தெய்வீகத் தன்மை எங்கே?

நாகை மாரியம்மன் திருவிழாவில் நடைபெற்றுவரும் தீமிதிப்பது தெய்வீகத்தன்மையில்லை என்பதை விளக்கத் தோழர் மு. சிவசங்கரன் கருப்புடையுடன் மூன்று முறை அமைதியாக நெருப்பின் மீது நடந்து காட்டினார். பச்சை மட்டையால் தீயைப் பக்குவமாக அடித்துப் பரப்பி விட்டால் யார் வேண்டுமானாலும் நடக்கலாம் என்ற உண்மையை மக்கள் தெளிந்தனர்.

நாடாளும் வழிகூற ரமணரை வேண்டிடும்

# சொர்க்கத்தில் காந்தியார்.

"ஆர்—எஸ்—டி"

★

பறக்கும் சமுக்காளத்தின் மீது அமர்ந்து பூலோகத்தின் பலபாகங்களையும் சுற்றிப் பார்த்தேன். பட்டி, தொட்டிகள், சந்து பொந்துகள் ஒன்றுவிடாமல் பார்த்தேன். கடைசியாகச் சொர்க்க லோகம் போய்ச் சேர்ந்தேன். கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது! எங்கும் ஒரே ஆர்ப்பாட்டம்! எல்லோரும் பரபரப்பாய்க் காணப்பட்டனர். சொர்க்கவாசிகள் அத்தனை பேரும் கூடிக்கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். எல்லோருடைய பேச்சும் காந்தியாரைப்பற்றியதாகவே இருந்தது. இன்னும் 46 ஆண்டுகள் கழித்து வருவதாயிருந்த காந்தியார், இப்பொழுதே வருகிறாராமே என்பதேஅவர்களுடைய ஆச்சரியம் கலந்த பேச்சுக்குக் காரணமாயிருந்தது. அந்தக் கூட்டத்தில் மூன்று உருவங்கள் மாத்திரம் நிம்மதியான நிலையிலும், அமைதியான மனத்துடனும் காணப்பட்டனர். அவர்களில் ஒருவர் பூலோகத்தில் பார்ப்பனர்—அல்லாதார் பிரச்சினையை, ஆட்சியாளர்கள் செவிகள் கிழிய, சட்டசபைக் கட்டிடங்கள் அதிர, எடுத்துக் கூறியவர். அந்தக் குற்றத்திற்காகப் பிராமணீயப் பீரங்கி வேட்டால் ஆகாயத்தில் கிளம்பி அப்படியே சொர்க்கம் போய்ச்சேர்ந்த பன்னீர்ச் செல்வம். மற்றுமிருவர் ஆச்சாரியார் கையில் உயிரைக் கொடுத்து விட்டு, தமிழைக் கைப்பற்றிக் கொண்டு சொர்க்கம் போய்ச் சேர்ந்த தாளமுத்து—நடராசர்கள். அம்மூவரின் ஞானப் பார்வையும் காந்தியாருடைய வருகை எதிர்பாராததல்ல என்று கூறுவது போலிருந்தது. பன்னீர்ச் செல்வம் உலக வரலாற்று ஏட்டுச் சுவடி ஒன்றைப் புரட்டிக்கொண்டு, பூலோகத்தில் பார்ப்பனீயம் அழிய இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன என்று விரல் விட்டு எண்ணிக் கொண்டிருந்தார். "தமிழுக்கு அமுதென்று பேர்—அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடிக் கொண்டே உட்கார்ந்திருந்தனர் தாளமுத்து—நடராசர்கள். திடீரென்று ஒரே ஆரவாரம் கிளம்பிற்று. வந்து விட்டார்! வந்து விட்டார்! என்றனர் எல்லோரும். காந்தியாரும் வந்து சேர்ந்தார்! கையில் தடியுடனும், மடியில் மூன்று உருண்டைகளுடனும் வந்து சேர்ந்தார். மரியாதைகாட்டி வணக்கம் செலுத்தி எல்லோரும் தரிசித்தனர். பின் ஒவ்வொருவராகத் தங்களுடைய இருப்பிடத்திற்குத் திரும்பினர். கடைசியாகக் காந்தியார் இம்மூவரையும் கண்டார். புன்னகை பூத்தார். ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அளவளாவிப் பேசினார். மலர்ந்த முகத்துடன் மட்டற்ற மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். நீண்ட நேரம் உரையாடினர். கடைசியாக, தங்கள் மடியிலிருப்பது என்ன என்று காந்தியாரை நோக்கி அம்மூவரும் ஏகோபித்த குரலில் கேட்டனர். காந்தியாரும் தன் மடியினின்றும் மூன்று உருண்டைகளை வெளியே எடுத்தார். முதல் உருண்டையில் "இந்தியர்கள் நன்றி கெட்ட 'மாமிசப்பிண்டங்கள்' என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட இந்துக்களால் காந்தியாருக்கு அளிக்கப்பட்டபரிசு" என்று எழுதியிருந்தது. காந்தியார் பேச ஆரம்பித்தார். என்னுடைய 24ம் வயதிலே பொது வாழ்வில் புகுந்து 55 ஆண்டுகள் அதிலே கிடந்து உழன்று, என் வாழ்நாளில் பாதி நாளை சிறைக்கோட்டத்தில் கழித்து, 17 தடவையாக 144 நாட்கள் பட்டினி கிடந்து, 200 ஆண்டுகள் ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலே சிக்கிக் கிடந்த இந்திய துணைக் கண்டத்துக்கு விடுதலை வாங்கிக் கொடுத்த எனக்கு, கிடைத்த பரிசு இது என்று கூறி முதல் உருண்டையை சுட்டிக் காட்டினார். இரண்டாவது உருண்டையை எடுத்தார். அதில் மதம் மக்களுக்கு வெறியை ஊட்டும் போதைவஸ்துமட்டுமல்ல, மக்களின் உயிரையும் குடிக்கும் விஷம் என்பதை, தன்னையே தியாகம் செய்து நிரூபித்துக் காட்டிய காந்தியாருக்கு இந்தப்பரிசு என்று எழுதியிருந்தது. தூய்மை, உண்மை, ஒழுக்கம் ஆகியவைகளையே தோழனாகக் கொண்டு அதையே மக்களுக்கு உபதேசித்து வந்தேன். எம்மதமும் சம்மதமே என்றேன். மத ஊழல்களைத் திருத்தி அது அழிந்து போகாமல் பாதுகாத்தேன். ஒரு கையில் கீதையுடனும், மற்றொருகையில் குரானுடனும் அலைந்தேன். கண்ணனையும் நபியையும் கைகோத்து போகச் சொல்லி அதை மக்களுக்கு சுட்டிக் காட்டினேன். சில காலமாக மனித மிருகங்கள் நடமாடிய நவகாளி, திப்பேரா போன்ற இடங்களில் நடையாய்நடந்து இடைவிடாமல் பிரச்சாரம் செய்தேன். 1934-ம் ஆண்டில் மதவெறியன் ஒருவனைச் சீர்திருத்தக்காரர் ஒருவர் தடி கொண்டு தாக்கியதற்காக, ஒருவாரம் பிராயச்சித்தம் தேடும் பொருட்டு பட்டினி கிடந்தேன். இந்து-முஸ்லீம் சமாதானத் தூதனாக ஊர் ஊராய்ப் பறந்து திரிந்தேன். அதற்காக மதவெறியர்கள் எனக்கு அளித்தபரிசு இது என்று இரண்டாவதுஉருண்டையைச் சுட்டிக் காட்டினார். மூன்றாவது உருண்டையை வெளியே எடுத்தார். அதில் "உலக அறிஞர்களுக்கெல்லாம்இத்தகையமுடிவுதான்" என்பதை இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் உண்மையாக்கிக் காட்டிய காந்தியாருக்கு இந்தப் பரிசு என்று எழுதியிருந்தது. அவ்வுருண்டையைக் கையில் எடுத்துக் களிப்போடு பேசினார் காந்தியார். ஏசுபெருமான் நபிகள் நாயகம் ஆகிய, மதப் பெரியார்களையும், சாக்ரடீஸ், லிங்கன் போன்ற சீர்திருத்தப் பெரியார்களையும், அவுங்சான் போன்ற அரசியல்பெரியார்களையும், நினைத்து இவ் உருண்டையைப் பார்க்கும்பொழுது, அரசியலையும் மதத்தையும் பிணைத்தே வாழ்ந்த எனக்கு மனச்சாந்தி உண்டாகி

# தேட்டாளர் திட்டம் தீர்க்குமா அல்லலை?

றது என்று கூறினார். ஆண்டவன் அருளைப்பெற அடி எடுத்து வைத்துக்கொண்டிருந்த நேரம் மதப் பாம்புகள், மனித மிருகங்கள், மாமிசப் பிண்டங்கள் ஆகியோரின் பிரதிநிதியாக கோட்சே என்னும் பார்ப்பனப் படித்த முட்டாள் இம்மூன்றுஉருண்டைகளையும் மரியாதை காட்டி, வணக்கம் செலுத்தி என் கையில் கொடுத்தான், வாங்கிக்கொண்டு நேரே இங்குதான் வந்து சேர்ந்தேன் என்று கூறினார் காந்தியார். இவ்வளவையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பன்னீர்ச் செல்வம் பார்ப்பனீயம் தங்களிடம் நேருக்கு நேராகவேவெற்றிபெற்று விட்டதா? என்று ஆச்சரியக் குரலில் கேட்டார். ஏன் ஆச்சரியப் படுகிறீர்கள் என்றார் காந்தியார். திரைமறைவிலே வேலை செய்து என்னையும் எங்கள் தோழர்களையும் வீழ்த்தியது ஆரியம். ஆனால் தங்கள் விஷயத்தில் நேராகப் போர் தொடுத்து வெற்றி பெற்று விட்டதுஎன்றார்பன்னீர்ச் செல்வம். மதவெறி தங்களோடு மாண்டு விட்டது என்று எண்ணுகிறீர்களா? அதுதான் கிடையாது. ஆரிய அட்டகாசம் இன்னும் முடிந்தபாடில்லை. இதோ பூலோகத்தைப்பாருங்கள் என்றார் பன்னீர் செல்வம். செல்வத்தின் பார்வையைத் தொடர்ந்து காந்தியாரும் பார்த்தார். பாஷ்யங்களும் வரதாச்சாரிகளும் ஒமாந்தூராரின் கைவிரலைக் கொண்டு, மதவெறி ஒழியவேண்டுமென்று மண்டை பிளக்க, தொண்டை கிழிய, பிரச்சாரம் செய்துவரும் கருஞ்சட்டையினரின் கண்களைக்குத்தி, இரத்தம் வடியச் செய்து கொண்டிருந்தனர். இந்தக் கோரக்காட்சியைக் கண்ணாரக் கண்டார் காந்தியார். ஓவென்றலறி, துள்ளி எழுந்தார். ஒழிக பார்ப்பனீயம் என்று உரத்த குரலில் கூறினார். அதைத் தொடர்ந்து மற்றும் மூன்று குரல்கள் கிளம்பின. நானும் பார்ப்பனீயம் ஒழிக என்று கூறிக்கொண்டே கட்டிலிலிருந்து கீழே விழுந்தேன். மண்டையில் பலமான அடி. கண்களைத் துடைத்துக் கொண்டு கடிகாரத்தைப்பார்த்தேன். காலை மணி 9. அப்பொழுதுதான் முந்திய நாள் இரவு "ராஜகுமாரி" சினிமா பார்த்து விட்டு, பறக்கும் சமுக்காளத்தின் மகிமையை நினைத்துக் கொண்டு படுத்தது ஞாபகத்திற்கு வந்தது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

[4ம் பக்கத் தொடர்ச்சி]

போல எங்கள் பெரியாரால் தோற்றுவிக்கப்பட்ட இந்தக் கருஞ்சட்டை என்னும் ஒரு இயக்கம், இந்து மதம் என்னும் கொடிய சப்பாத்தியை அழிக்க இத்தாலியப் பூச்சியைப்போல் கிளம்பி இருக்கிறது. அதுஇப்பொழுதுதான் வளர்வடைந்து வருகிறது. அதன்முற்போக்குச் சக்தியைக் கண்டு, வஞ்சகப் பார்ப்பனீயம், வகுப்புத் துவேஷத்தை உண்டு பண்ணுகிறது என்று ஆட்சியாளரின் துணை கொண்டு அடக்கிவிடப் பார்க்கிறது. மேலும் மேலும் அதற்கு ஆவனவும் செய்து வருகிறது. ஆனால் ஒன்று எச்சரிக்கிறோம். "ஏ பார்ப்பனீயமே! உன் குற்றத்தை ஒப்புக்கொண்டு திருந்திவிட; இல்லையேல் சப்பாத்தி அழிந்த மாதிரி, உங்கள் இந்துமத வர்ணாச்சிரமக் கோட்டை அழியப் போவது நிச்சயமென்று.

அறிவுக்குப் பொருத்தமான, மனிதனை இழிவுபடுத்தாத நல்ல மதம் வேண்டாமென்று கூறவில்லை. ஆனால் திராவிடக் கழகம் மத வெறியை வளர்க்கிறது என்று கூறுகிறார்கள் என்றால், "கேழ்வரகில் நெய் ஒழுகுகிறது என்றால், கேட்பவருக்கு மதி எங்கே போயிற்று என்பது மாதிரித்தான் ஆகும்.

அப்படித் திராவிடர் கழகமானது சட்ட விரோதமானது என்று, இதுவரையிலும் அரசியலாராகிய உங்கள் மந்திரிகளுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ ஒருவிதமான தகவலும் கிடைத்திருப் பதாகத் தெரியவில்லை. போலீஸ் அதிகாரிகள் சென்ற இடமெல்லாம் வெற்றிகரமாகத் திரும்பி வந்திருக்கிறார்களே ஒழிய, எதுவும் அவர்களுக்குக் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! "சட்டியில் இருந்தால் அல்லவா அகப்பையில் வரும்".

மேலும் திராவிடர் கழகமானது மிக மக சாத்வீகமான முறையில் நாளது வரையில் நடந்து வந்திருக்கிறது. மேலும் தலைவர் பெரியார் அவர்கள் காந்தியாரைவிடப் பன்மடங்கு அமைதியைக் கையாளும்படி வலியுறுத்திக் கூறி வந்திருக்கிறார்கள். இது உங்களுக்கும் தெரிந்திருக்கும். இதற்காக அனேக சான்றுகளும் எங்களால் காட்டவும் முடியும்.

உதாரணமாக உங்கள் அறிக்கைக்குப் பிறகு போலீஸ் அதிகாரிகள் அநேக கழகக் கொடிகளை இறக்கிச் சென்றிருக்கிறார்கள். தலைவரின் உத்தரவுக்கிணங்கக் கழகத் தோழர்கள் அமைதியாக இருந்திருக்கிறார்கள். இதே செய்கை காங்கரஸில் நடந்த பொழுது என்ன நடந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். ஏன்? நீரும் ஒரு தியாகிதானே. அதனால் அதில் தங்களுக்கும் பங்கு உண்டு என்று நினைக்கிறேன்.

கிரிமினல் திருத்த 16-வது சட்டப்படி கருஞ் சட்டைப் படைதான் சட்ட விரோதமானதே தவிர, பறந்து கொண்டிருக்கும் கழகக் கொடியும் சட்ட விரோதமானதா? அல்லவே அல்ல. அப்படி இருந்தாலும் தாங்கள் கண்ணியமான முறையில் நடந்து கொள்வதாயிருந்தால் கழகக் கொடிகளை இறக்கி விடும்படி உத்தரவு இட்டிருக்கவேண்டும். அதுதான் முறை, நியாயமானதுங்கூட. அதை விடுத்து அயோக்கியர்களின் வார்த்தைகளைக் கேட்டு, மந்திரிவேலை பார்க்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன் எங்கள் இனத்தார் என்ற காரணத்தால்.

நிற்க! தங்கள் உத்தரவின்படி எந்தெந்த ஊர்களில், எந்தெந்த போலீஸ் அதிகாரிகள் கழகக் கொடியை இறக்கினார்களோ, அவர்களையே அந்தந்த இடங்களுக்குச் சென்று கொடியை ஏற்றி வணங்கும்படியும் உத்தரவு இடவேண்டும்; குற்றமற்ற ஸ்தாபனம் திராவிடக் கழகம் என்பதற்காக. அதுதான் நீதியும் நேர்மையுங்கூட. தங்கள் ஆட்சியில் வகுப்பு வாதத்தை ஒழித்து, காந்திமகான் கண்டநாடாகச் செய்யவேண்டுமென்ற எண்ணம் உண்மையில் தங்களுக்கு இருக்குமானால், தாங்கள் உயர்ந்தவர்கள் என்று மக்களிடமிருந்து பிரித்துக் காட்டுவதற்கு அறிகுறியாகப் போடப்பட்டிருக்கும் பூணூலை அறுத்தெறியவேண்டுமென்றும், வடகலை, தென்கலை என்றும், சைவர், வீரசைவர் என்றும், நெற்றியில் பட்டை நாமத்தையும், விபூதியைக் கட்டுக்கட்டாய் இட்டுக்கொண்டு மக்களை ஏய்த்துத் திரிபவர்களையும், தங்கள் கையெழுத்திற்குப் பின்னால் தங்கள் ஜாதியைப்போடுபவர்களையும், கடைகெட்ட ஆபாசக்கருத்துக்களைக் கூறும் புராணங்களையும், மத நூல்களையும் சட்ட விரோதமானதாக்கி, எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய தமிழ் மறையாகிய திருக்குறளை வேத நூலாக்கி எல்லோரும் ஓர் குலம், எல்லோருமோரினம் என்ற சட்டத்தை இயற்றும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

★


## வரப் பெற்றோம்.

அருள் ஜோதி.
(மாத வெளியீடு)
ஆசிரியர் எம்.ஏ.வி. ஜெய்லானி (பி.ஏ)
தனிப்பிரதி 0—6—0
95. லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை 1.


## பழக்கமும், வழக்கமும்

### பாழ் செய்யும் பேய்கள்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளுவதில்லை. பள்ளியில் சமயத்தைப் பாடமாக வைக்கச் சைவ சமய ஏடுகளும், பொதுத் தன்மைக்கு ஒத்து வருவதில்லை. பின் எதை வைப்பது? இப்பொழுது வருடத்திற்கு ஆயிர ரூபாய் வெகுமதி கொடுத்துச் சில பண்டிதர்களை வைக்கப்போகிறார்களாம். அவர்களைக் கொண்டு புதுப் புஸ்தகங்களெழுதிப் பாடமாக வைத்து விடலாமென்றால், புஸ்தகத்தில் பிரமமயம், சிவமயம், விஷ்ணு மயம் எந்த மயத்தைப் போடுவதென்கிற மயச்சண்டைவந்து விடும். யு.(U) ஒய். (Y) மார்க்குச் சண்டையைத் தீர்க்கச் சிலுவை மார்க்கு வேண்டி வந்ததுபோல் வந்தாலும்வரும். நமது சாஸ்திரிகளோ, பண்டிதர்களோ எந்த ஏடு எழுதினாலும் திருவருளை முன்னிட்டுத் தானே எழுதவேண்டும். திருவருள் குறுக்கே வந்தால் மனித அருள் மறைந்து போகிறது.

ஒரு ராஜாவின் பிள்ளையைப் படிக்கவைத்தார்கள். எழுத்திற்கு மத்தியில் ராஜா போடாமல் சொல்லிக்கொடுப்பது, இராஜ அந்தஸ்திற்குக் குறைவு ஆனதால், அ. மகாராஜா. ஆ. மகாராஜா. இ. மகாராஜா என்றும், எழுத்தைக் கூட்டிச் சொல்லுகையில் அ.' மகாராஜா. து. மகாராஜா அது மகாராஜாவென்றும், வாத்தியார்கள் சொல்லிக் கொடுத்தார்கள். எத்தனையோ பெரிய வாத்தியார்கள் சொல்லிக் கொடுத்தும் படிப்புவரவில்லை. ஒரு வாத்தியார் என்ன வந்தாலும் சரி என்று, மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு, அ. ஆ. இ. ஈ. என்று நடுவில் மகாராஜா வில்லாமல், இரண்டு பிரம்பிலும் கொடுத்துச் சொல்லிக் கொடுத்தார். படிப்பும் வந்தது. ராஜாவை எழுத்திற்கு மத்தியில் போட்டால், படிப்பு வராது. திருவருளைப் புஸ்தகத்தில் சேர்த்து எழுதினால், அந்தப் புஸ்தகம் தெய்வத்திற்கு உபயோகப்படும், மனிதனுக்கு உபயோகப்படாது. ஆங்கிலேயப் பண்டிதர்கள் மனிதர்களுக்காகவே புஸ்தகமெழுதுகிறார்கள். நாம் எழுதும் புஸ்தகம் தெய்வத்திற்கா எழுதுவது?

எப்படியானாலும் பள்ளியில் இந்து சமயப்படிப்பு வைத்தே தீரவேண்டும். அதை விடமாட்டார்கள். எந்த ரூபத்திலேனும் அதைச் செய்வார்கள். இந்து சமயத்தில் பெரிய நூல் பிரம சூத்திரமென்பது. வியாசர் செய்ததினால் வியாச சூத்திரமென்பார்கள். இதைப்பாடமாக வைத்தால் பிராமணப் பையன்களுக்குத்தான் சொல்லுவார்கள். மற்றப் பையன்களுக்குச் சொல்லமாட்டார்கள். வியாச சூத்திரத்திற்கு அர்த்தம் சொன்னவர்கள் சமய ஆச்சாரிகள். அவர்களெல்லாம் தெய்வத்தின் அவதாரமென்பார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகவே அர்த்தம் செய்திருக்கிறார்கள். பிரமத்தையோ, கடவுளையோ கண்டவர்களா? தெரிந்தவர்களா? தெரிந்திருந்தால்தானே இரண்டுபேர் அர்த்தமாவது ஒன்றாயிருக்கும். அதை வைப்பதும் சரியில்லை. பண்டைய மதச் சம்பிரதாயங்களுக்கு விரோதம் சொல்லக்கூடாதென்கிற மந்திரியும், செத்தவர்களைப் பிழைப்பிக்க டில்லிக்குப் போகும் மந்திரியும், இவர்கட்கு ஆலோசனை சொல்லப் பூசுரர்களுமிருக்கையில் எந்த எண்ணத்தையும் வெகு சுளுவாய் முடித்து விடுவார்கள். இராஜ சிம்மாசனம், குரு பீடம் ஆகிய இவைகளின் தனித்தனி அதிகாரங்களுக்கே நமது சனங்கள் பயந்து கிடப்பது வழக்கம். இரண்டும் ஒன்று சேர்ந்து செங்கோலைத் தூக்கினால், யார் பயப்படமாட்டார்கள்? மேனாட்டுச் சனங்களா நாம்? நம் நாட்டுச் சனங்களோ ஒரு ஜாதிக்கு ஒரு ஜாதி வைப்பாட்டி மக்கள். மானம், உணர்ச்சி, மதியில் அலட்சியமுடையவர்கள்.

மேனாட்டில் அப்படியில்லை. அங்கே உண்மையை மனதுக்குள் அடைத்து வைக்காமல், வழக்கத்தில் காட்டுகிறார்கள். ஜனக்கட்டிலும், ராஜ்ஜியத்திலும் ஏதேனும் குற்றம் வெளிப்பட்டால், அதைப் பொது ஜனங்கள் உண்மை விளக்கால் சோதித்துத் திருந்த வழியுண்டு. நமது நாட்டில் அது கஷ்டமாகவிருக்கிறது. ஏன்? மற்ற நாடுகளில் சட்டதிட்டம் மனிதனால் போடப்பட்டது. நமது நாட்டில் கடவுளால் போடப்பட்டது. கடவுளால் போடப்பட்டு, ரிஷிகளால் ஆமோதிக்கப்பட்டு, அந்தணர்களால் அமுல் நடத்தப்படுவது. இதைத் திருத்தவோ மாற்றவோ யாருக்கும் அதிகாரமில்லை என்றாலும், சட்ட சபைக்கு அதிகாரமுண்டு என்றாலும், இப்பொழுது தான் சட்ட சபை மெம்பர்களுக்குச் சட்டசபை ஒழுங்கைக் கற்றுக் கொடுக்க பிரசிடெண்டு பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார். சிகரட்டுப் பிடிக்கக்கூடாது, பொடி போடப்படாது, ஆரஞ்சிப்பழம் தின்னக்கூடாது, தின்னால் கொட்டையை எங்கே எப்படித் துப்புவது? யார் எடுத்தெறிவது? பேப்பர் படிக்கக் கூடாது. பார்ப்பவர்கள் உட்காரு மிடத்தில் உட்காரக் கூடாது. தூங்கக்கூடாது, தூங்குவதனால் கண்களை மூடக்கூடாது, மூடினாலும் விழித்திருக்கவேண்டும். சட்டசபையில் நடக்கவேண்டிய ஒழுக்கங்களெல்லாம், இப்பொழுது தான் கற்றுக் கொள்ளுகிறார்கள். அதற்குப் பின் மற்றதெல்லாம் கற்றுக் கொள்ளுவார்கள்.

பேசும் கழுதைகள் சட்டசபையில் உட்கார்ந்திருக்கிறதென்று மேனாட்டில்; மேனாட்டான் சொன்னான் என்று நமது அசம்பளித் தலைவர் சட்ட சபையில் சொன்னார். போன எலக்ஷனில் சிலரைப்பற்றி இவருக்கு என்ன தெரியும்? என்ன யோக்கியதையிருக்கிறது? இவரை நிறுத்துகிறார்களே என்று ஆட்சேபித்தார்கள். காங்கரஸ், கழுதையை நிறுத்தி ஓட்போடு என்று சொன்னால் போடவேண்டுமென்று பிரசார மேடையில் காங்கரஸ் சொல்லிற்று.

பள்ளியில் கெருட புராணத்தையும், திருவிளையாடல் புராணத்தையும் பாடமாக வைத்து விட்டால் என்ன? வைணவன், சைவன், ஸ்மார்த்தன் மூவருக்கும் தகராறிருக்காது. கெருடன் வைணவனுக்காயிற்று. திருவிளையாட்டுச் சிவபெருமானின் லீலை சைவனுக்காயிற்று. கெருட புராணத்திலுள்ள பிதிர்லோகமும், திருவிளையாட்டுப் புராணத்திலுள்ள சிவபெருமானின் கடாட்சமும் ஸ்மார்த்தப் பிராமணர்களுக்கும் சொந்தமாகும். பண்டைய மத சம்பிரதாயங்களுக்கு விரோதம் கூடாதென்பதுதானே கல்வி மந்திரியின் எண்ணம். அந்த எண்ணத்திற்குப் பங்கமுமில்லை. இந்தப் புராணங்களில் செத்தவர்களைப் பிழைப்பித்த மார்க்கங்களுமிருக்கின்றன. இது பண்டிதர்கள் சொல்ல வேண்டியது.

## ரொம்ப நல்லதுதானே!

"காப்பி விலை ஏற ஏற குடிப்பவர்கள் தொகை குறைவதால் கும்பகோணத்தில் பால் விலை இறங்குவதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது"

இப்படியாவது காப்பிக்குடி ஒழிந்து மக்களுக்கு நல்ல பால் தாராளமாகக் கிடைக்கட்டுமே? என்று மனம் குளிரும் நேரத்தில், "காப்பி, தேயிலை, புதுவரி வாபஸ்" ஆகலாம் என்று பத்திரிகைக் குறிப்புக் கூறுகிறது. என்ன இருந்தாலும் பார்ப்பனர்களின் பிழைப்பைப் பாதிக்கும் சட்டத்தைப் பார்ப்பனப் பத்திரிகைகள் ஆதரிக்குமா? பார்ப்பன அரசாங்கம் தான் விட்டுக்கொடுத்துவிடுமா?

## இந்தியாவுக்கு உபதலை நகரமும் அங்கேதான்.

மத்திய மாகாணத்தின் வடபகுதியில் இந்தியாவுக்கு உபதலை நகரம் ஒன்றை ஏற்படுத்தலாம் என்ற அபிப்பிராயத்துக்கு இப்போது ஆதரவு கிடைக்க ஆரம்பித்திருக்கிறதாம். செல்வாக்கு வாய்ந்தவர்கள் (இவர்கள் யாரோ) இந்த யோசனையைஆதரிக்கிறார்களாம்.

டில்லியை விஸ்தரிக்கும் யோசனைக்கு அவ்வளவாக ஆதரவைக் காணோமாம்.

# எமது தீர்ப்பு

## மதம் பிடித்த படாதிபதிகள்.

ஆசிரியர் சுப. நாராயணன்.
விலை. அணா. 0-4-0.
எரிமலைப் பதிப்பகம். துறையூர்.
திருச்சி மாவட்டம்.

சினிமாப் படங்களின் அதிபதிக ளான முதலாளி வர்க்கம் மதம் பிடித்து, மக்களின் வாழ்வைப் பாழ்படுத்தித் தன் வாழ்வை உயர்த்திக் கொள்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக ஆசிரியரால் விளக்கப்பட்டிருக்கிறது. முன்னேற்றக் கருவியான சினிமா, இந்த நாட்டில் முன்னேற்றத்தின் முட்டுக்கட்டையாக விளங்குகிறது என்றால் அது என்? எவ்வாறு? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? தெரிந்து கொள்ள விரும்பினால் எவருமிதைப் படிக்கலாம்.

## ஆரியப் புல்லுருவி.

ஆசிரியர் சுப. நாராயணன்.
எரிமலைப் பதிப்பகம். துறையூர்.
திருச்சி மாவட்டம்.

ஆரியப் புல்லுருவி இந்த நாட்டில் பரவியதால், ஏற்பட்ட கெடுதல்கள் என்னென்ன? பரம்பரையாகப் பார்ப்பனர்கள் அச்செயலுக்கு எவ்வெவ்வாறு உதவி வந்திருக்கிறார்கள் என்பதை ஓரளவுக்கு இந்நூல் விளக்கிக் கூறுகிறது. சிவமயப் போக்குக்குக் கண்ணீர் சிந்தும் போக்கு தவறு என்றால்தானே, பார்ப்பனர் போக்கும் தவறு என்று கொள்ளப்படும். இதை ஏனோ ஆசிரியர் சிந்திக்கவில்லை.

எழுத்து முறையிலே மாற்றத்தை வரவேற்று, பதிப்பிட்டிருக்கும் முறை வரவேற்க வேண்டியதே. ஆனால் எல்லா நெட்டெழுத்துகளுக்கும் (ா) கால் போட்டு விடுவதே போதுமென்று நம்மால் எண்ண முடியவில்லை. இதில் கையாண்டிருக்கு முறையால் அச்சுத் தொழிலின் வளர்ச்சிக்கோ, “டைப்” வளர்ச்சிக்கோ பெரும் பயனில்லை. ஆசிரியர் முடித்துக் காட்டியிருக்கும் முறையில் 171 எழுத்து வடிவங்களைக் குறிப்பிடுகின்றார். 49 வடிவங்களுக்குள்ளேயே தமிழ் எழுத்துகளை அடக்கிவிடலாம் என்பது நமது திட்டம்.

## திராவிடஸ்தான் வேண்டாமா?

(ஒரு எழுத்துப் போர்)
விலை அணா எட்டு.
பகுத்தறிவுப் பாசறை,
147 பவளக்காரத் தெரு சென்னை 1.

திராவிடஸ்தான் என்பது இனவளர்ச்சிக் கன்று, தமிழ் நாட்டு முதலாளிகள் தனிக் காட்டு அரசர்களாக விளங்கிப் பிறபகுதியைச் சுரண்டுவதற்கான திட்டம் என்கிறார் கம்யூனிஸ்ட் தோழர். இக்கருத்துக்கு அவரால் என்னென்ன கூறி விளக்க முடியுமோ அவ்வெல்லாவற்றையும் கூறுகிறார் அவர். வெடிகுண்டோ என நினைத்தேன், அத்தனையும் ஈயத் துண்டு என்கிறார் நண்பர் இளஞ் செழியன். இந்தச் “சண்டை” ஏற்கனவே “போர் வாளில்” வந்ததுதான், இப்போது புத்தக வடிவில் வந்திருக்கிறது. ஈயத் துண்டு என்ற முடிவு சரிதானே என்று கேட்கிறது பகுத்தறிவுப் பாசறை. நல்ல தீர்ப்பு மக்கள்தானே நல்க வேண்டும்.

## தொழிலாளர் விழிப்பு.

(கவிதை)
ஆக்கியோர் ஆர். நாகலக்குமி.
விலை அணா எட்டு.
அறிவியக்க நூற்பதிப்பகம்,
506. ஏ. தங்கசாலை தெரு
சென்னை 3.

பெரியாரவர்களின் மதிப்புரையைப் பெற்ற இக்கவிதைநூல் “தொழிலாளர் தலைவர்” என்பது முதல் “காந்தியடிகள் எங்கே” என்ற தலைப்புவரை 20 தலைப்புகளில் தொழிலாளரின் இழி நிலைக்கு ஏதுவாயிருக்கும் “பித்தலாட்டம்”, “திருட்டு”, “மதம்” முதலிய பலவற்றின் கொடுமைகளைக் குறித்துப் பாடப் பெற்றிருப்பதாகும். கவிதை எழுச்சியினும் உரிமை எழுச்சி தலை தூக்கி நிற்றலை இதனைப் படிப்பவர் உணர்வர். விலை இன்னுஞ் சற்று குறைவாயிருக்கலாம்.

## அழியட்டுமே திராவிடம்.

ஆக்கியோர் துறையூர் நாராயணன்.
விலை அணா 0—8—0
வெளியீடு—புரட்சிப் பதிப்பகம்
துறையூர்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக இடைவிடாது உழைத்தும், இன்றுவரை திராவிடக் கழகத்தின் மதிப்பை எவரும் சரிவர உணரவில்லை. க. ச. படைக்குத் தடைவிதிக்குமளவு அரசாங்கத்துக்கு மானமும் அறிவும் மழுங்கி விட்டன. எனவே இனி அழிவு வேலையில்தான் இறங்க வேண்டும். திராவிட கழகத்தைக் கலையுங்கள், திராவிட நாட்டையே அழியுங்கள் என்ற கருத்துக் கொண்டு, ஆசிரியர் அனல் கக்கும் நடையில், ஆத்திரமும் உணர்ச்சியும் சேர்த்துக் கோத்த வார்த்தைகளை வாரி வீசியிருக்கிறார். யாவரும் படித்து உணர்ந்து சிந்திக்கத் தக்க நூல்தான்.


## நாதன் கம்பெனி லிமிடெட்.

★

### புத்தக விலைப் பட்டியல்.

தலைவர் பெரியார்.

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நடும் | 0 | 3 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம் | 0 | 1 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |
| ஜஸ்டிஸ் கட்சிக்குக் கிராக்கி, புதுகட்சியா? | 0 | 1 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |

அறிஞர் அண்ணாதுரை.

| | | | |
|---|---|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2 | 4 | 0 |
| கம்பரசம் | 1 | 8 | 0 |
| குமரிக்கோட்டம் | 1 | 0 | 0 |
| வர்ணாஸ்ரமம் | 0 | 12 | 0 |
| விடுதலைப்போர் | 1 | 0 | 0 |
| கற்பனைச்சித்திரம் | 1 | 0 | 0 |
| சிறு கதைகள் | 1 | 0 | 0 |
| திராவிடர் நிலை | 0 | 6 | 0 |
| ஏ தாழ்ந்த தமிழகமே | 0 | 8 | 0 |
| ஆரியமாயை | 1 | 0 | 0 |
| நல்ல தீர்ப்பு | 0 | 4 | 0 |
| நாடும் ஏடும் | 0 | 6 | 0 |
| மே தினமும் திராவிடர் கழகமும் | 0 | 5 | 0 |

கிடைக்குமிடம்:-
கச்சேரி வீதி, ஈரோடு.

94 C. பிராட்வே,
சென்னை.


Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE